திராவிடநாடு

2-11-58 | வார வெளியீடு | விலை 16 காசு

# உணர்ச்சி வேண்டும்

( புத்தொளி அகமத் )

———

கதர் வாங்க வாரம், விழாக்களுண்டு
கதறுகின்ற ஏழைக் கண்ணீர்துடைத்தாரில்லை
பதரையும் ஏற்றுமதி செய்துவிட்டார்
பசிதீர வழி ஒன்றும் செய்தாரில்லை.

எதிர்க்கட்சி வளம் அடையும் பயத்தினாலே
எழுந்துவிட்டார் "கால் நடையால்" கொள்கைமூட்ட
இதமாகப் பேசுகின்றார் கெஞ்சுகின்றார்
இனிவரும் "தேர்தலிலே" இடம் பிடிக்க.

மிதமாக இருக்கலாமோ இனியும் நாமும்
மீதமுள்ள குருதியையும் இழக்க நேரும்
நலமாக நாம் வாழ வேண்டுமானால்
நம் நாடு நமக்கெனும் "உணர்ச்சி வேண்டும்"

ஒருதரம்! இரண்டுதரம்! உலகளந்த பெருமாளாம் — ஊருக்கெல்லாம் படியளப்பாராம்— 'துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனம் செய்பவராம் — மகாவிஷ்ணு, இதோ—கேளுங்கள், பெருமக்களே, ஒருதரம்! இரண்டுதரம்! என்ன? 21,000 ரூபாயா!! இன்னொருதரம் பாருங்கள், பளபளவென்று இருக்கிறது மேனி, கைவண்ணத்தையும் காலழகையும் பாருங்கள், மாளிகைக்குள்ளே வைக்கலாம், மவுசாக இருக்கும், காண்போர் ரசிக்கும் கலையழகு, இந்திய உபகண்டத்துச் சிற்பி செய்தது, அங்கே இந்தச்சிலை அகப்பட்டிருந்தால் கோயில் கட்டி கும்பாபிஷேகம் செய்து பாலும் தேனும்கொட்டி கும்பிடுவார்கள்! நீங்கள், 'மியூசியத்தில்' வைக்கலாம்—அழகுப் பொருள்களில் ஒன்றாகமாளிகையின்வாயிலில்வைத்திருக்கலாம் என்ன சொல்லுகிறீர்கள்? ஒருதரம்! இரண்டுதரம்! மூன்றுதரம்! 21,000-க்குவிட்டாயிற்று!! —என்று இலண்டனில், கடந்த 20-ந்தேதி, மகாவிஷ்ணு சிலையை ஏலம்போட்டார்களாம். இது 1200-ம் ஆண்டில், செய்யப்பட்ட சிலையாம். இலட்சுமியைக் கட்டியணைத்துக்கொண்டிருப்பது போலிருக்கும் இச்சிலையை, நியுயார்க்கைச் சேர்ந்த ஒரு அமெரிக்கமாது அந்தவிலை கொடுத்து ஏலம் எடுத்திருக்கிறாள்!! எதற்கு? பூஜைசெய்ய அல்ல, அரைநிர்வாணக் கோலத்துடன் விளங்கும் அழகுச்சிலைகளுக்கு அருகேவைக்க!!

*

முடியாது! முடியாது! குறைந்த நேரம் வேலைசெய்ய மாட்டோம் — அதிக நேரமே வேலைசெய்வோம்!! என்று, முழக்கமிட்டு முடிவுதெரிவித்திருக்கிறார்கள், ஸ்விட்சர்லாந்து நாட்டுத் தொழிலாளர்கள். ஓய்வு தேவை! உழைத்துக் களைத்த எமக்குக் கொஞ்சமாவது ஓய்வு கொடு!—என்று முழக்கமிட்டவண்ணம், வேலை நிறுத்தம் செய்யும்நிலையில் நம்ம சர்க்கார், இந்த நாட்டுத் தொழிலாளர்களை வைத்திருக்கிறது. ஸ்விஸிலோ, ஒவ்வொரு தொழிலாளியும் 48-மணிக்குப் பதில்

# கேட்டீரா! சேதி!

44-மணி நேரம் — ஒரு வாரத்தில்!—வேலைசெய்தால் போதும் என்று அரசு, தெரிவித்ததாம். இதன்மீது, தத்தம்து கருத்தைச் சொல்லும்படி தொழிற்சங்கங்களைக் கேட்டதாம். தொழிலாளிகள் கருத்தை அறிய, அந்த நாட்டுத் தொழிற்சங்க யூனியன்தேர்தல் நடத்தியதில் பெரும்பாலான தொழிலாளர்கள் அதிகநேரம் வேலைசெய்வோம் என வாக்கு போட்டிருக்கிறார்களாம். இங்கு, உழைப்பது ஒரு 'சுமை'யாக—வாடும் கருவியாக உள்ளது! உழைப்பது அங்கு இன்பமாக உள்ளது!!

*

யாரோடும் சேர்ந்து வாழ அவர்கள் விரும்பவில்லை! தனியாக இருப்பதையேசுகம் என்று நினைக்கிறார்கள்!!—என்று, ஆச்சரியத்தோடு, தெரிவித்துள்ளார் நேரு. அவர்கள் நாட்டில், இந்த விமானகாலத்தில் கூட ஒரு வண்டியோ, வாகனமோ கிடையாது, கோவேறு கழுதையும், 'யாக்' எனும் எருமை மாடும்தான், சவாரிக்கு இருக்கின்றன. சாதாரண ஒருகுதிரை வண்டிகூடக் கிடையாது. அதைப்பார்த்தபோது, எவ்வளவு விந்தையான இடத்திலிருக்கிறோம் என்று நினைத்தேன்! என்றாலும், அந்த மக்கள், யாருடைய தொல்லையும் இல்லாமல், நாகரிகமடைந்தோர் என்போரின் எவ்வித தூண்டுதலும் இல்லாமல் நிம்மதியாகத் தானிருக்கிறார்கள்! — என்று புதுடில்லியில் 27-ந்தேதி நடந்த அகில உலக விமானப்போக்குவரத்து சங்கக் கூட்டத்தில் பேசியபோது, தான் அண்மையில் சென்றிருந்த பூடானைப்பற்றிக் குறிப்பிட்டார், நேரு.

*

ஒன்றாக உழைத்து, கிடைத்ததை ஒரு இடத்தில் சேமித்து வைத்து, தேவையானபோது அதையெடுத்து ஒருவருக்கொருவர் பங்கிட்டுக்கொண்டு, சண்டை சச்சரவு இல்லாதவன் இருப்பவன், பேதமே இல்லாமல் வாழும் கூட்டம் ஒன்றைக் கண்டாராம், ஜயப்பிரகாஷ்நாராயண்! இப்போது பேசப்படுகிற சோஷலிசமுறைகள் அந்தக் கூட்டத்தாரிடம் நெடுநாட்களாகவே, பழக்கமாயிருந்து வருகிறதாம். இந்தக் கூட்டம், சில ஆண்டுகளுக்கு முன் புதிதாக உருவாக்கப்பட்ட இஸ்ரேல் நாட்டில் உள்ளதாம். இவர்கள் பெயர் கிப்புஸ் என்பதாம். இஸ்ரேல் பிரதமரான பென்குரியன், இந்தக் கிப்புஸ்களைச் சேர்ந்தவர்தானாம். இவர்களைப்போலவே, ஒவ்வொரு ஊரிலிருக்கும் மக்களும், ஒன்றாக உழைத்துச் சேமித்துப் பங்குபோட்டு வாழ்ந்தால் எப்படியிருக்கும் உலகு! இவ்வளவு போராட்டங்களா தேவைப்படும்!!

*

போராட்டமோ இரத்தம் சிந்துதலோ இல்லாமல், இரண்டு இராணுவத்தளபதிகள் இந்த கிழமை, அரசாங்கத் தலைவர்களாகியிருக்கிறார்கள். ஒருவர், சென்ற சிலநாட்களுக்கு முன் பிரதமராக ஆக்கப்பட்ட அயூப்கான். இவர், பாகிஸ்தானின் தலைவராக ஆகிவிட்டார். இன்னொருவர், பர்மாவின் முன்னாள் பிரதமர் யூநூவின் விருப்பப்படி, பிரதமராக பதவி பெற்றிருக்கும் ஜெனரல்நூவின் என்பவராகும். இரண்டு நாடுகளிலும், இப்படி இராணுவத்தினர் அரசுக்கு வரக்காரணம், திரைமறைவில் கிளர்ச்சிக்கான ஆயத்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்ததுதான், என்று தெரிகிறது. பர்மாவில், ஆறு மாதம் கழித்துப் பொதுத் தேர்தல் நடத்தப்படுமென்று தெரிகிறது! பாகிஸ்தானில்...? கேள்விக்குறிகள்தான், பதிலாகக் கிடைக்கின்றன.

# இருமுகம்

17] ஆண்டு சந்தா ரூ. 8 [2—11—58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 16


பால் வடியும் முகம் — அந்தப் பசுங்கிளி, உட்கார்ந்திருந்தாள், தவக் கோலத்தில்.

முடியாத சடையும், மூடிய கண்களும், வெள்ளை உடையும், அவளழகை அதிகப்படுத்திக்கொண்டிருந்தன.

முற்றும் துறந்தவள் நிலைக்கு அவள் வந்துவிட்டது, வயோதிகத்தால் அல்ல! வாலிபத்தின் வசீகரம், அவளது அங்கங்களில், புதுச்சாயலை பூசியிருந்தது. வடிவழகி! நிலத்து நிலா!!

கண்களை இந்நேரம் மூடிக்கொண்டேயிருந்தவள், கொஞ்சம் திறக்கிருள்.

மெதுவாக எழுந்திருக்கிருள். புருக்களிரண்டு பூமியில் அசைவதுபோலிருக்கும், இரண்டுகால்களையும்மெதுவாக எடுத்து வைத்தபடி அந்த மண்டபத்தைவிட்டு, வெளியே எட்டிப்பார்க்கிருள். மண்டபத்தைச் சுற்றி அடர்ந்த மரக்கா. ஆகவே, யாராவது வந்தாலும், கீழே உதிர்ந்து கிடக்கும் சருகுகளில் கால்கள்படுவதால் எழும்ஒலி, 'சரசர'வென்று கேட்கும். அப்படி ஏதோ கேட்கிறது! ஓடுகிருள், உள்ளே அந்த அழகி. பழையநிலை. யோகிஸ்வரர் போல உட்கார்ந்துகொண்டு யாராவது வருகிருர்களா என்று ஓரக்கண்ணுல் பார்ப்பதும், பிறகு மூடிக்கொள்வதுமாக இருக்கிருள்.

*

பேரறிஞர் என்கிருர்கள் அவரை—அவர்மட்டும் வெளியில் வந்து வேலைசெய்யட்டும், பிறகு பாருங்களேன் என்று பெருமையுடன் பேசுகிருர்கள் — நேருவுக்கு வேண்டியவர், நினைத்தால் பிரதமராகக் கூடவரலாம் என்று வர்ணிக்கிருர்கள்—அவர் சென்னைக்கு வரப்போவதைப்பற்றி ஏடுகள் எழுதின—என்னவோ இப்படியெல்லாம் சொல்கிருர்களே, அவர் என்ன வழங்கப்போகிருர் நாட்டுக்கு என்று ஆவலோடு எதிர்பார்த்தோம்! ஆசைக்கும் அச்சத்துக்குமிடையிலே திண்டாடும் 'அழகி'யின் கதைதான் கவனத்துக்கு வந்தது!!

சென்னைக்கு வந்து சில இடங்களில் சொன்மாரி பொழிந்துவிட்டுப் போய்விட்டார், தோழர் ஜயப்பிரகாசநாராயண். வெளிநாடுகள் பல சென்று, புதிய வேகத்துடன் வருகிருர், விவேக விளக்கங்கள் தரப்போகிருர் என்றே எதிர்பார்த்தோம். காங்கிரசின் போக்கையும், அதைக்கட்டியிழுக்கக்கடிவாளம்போல ஒரு எதிர்க்கட்சியிருக்க வேண்டியது குறித்தும், யோசனைகள் நல்குவார் என நம்பினேம். முற்றுந் துறந்த விளேபாவுடன் அடைக்கலம் புகுந்த ஞானி போல ஒருசமயத்திலும், இன்னும் அரசியல் சபலம் விடாதவராக இன்னொரு சந்தர்ப்பத்திலும், அச்சத்துக்கும் ஆசைக்கும் இடையில் அல்லாடும் உருவத்தையே கண்டோம்! எதிர்பார்த்தபிரகாசரைக் கண்டோமில்லை!!

எதிர்க் கட்சிகளையெல்லாம் காங்கிரஸ் இழுத்துக்கொண்டு, அவைகளின் கூட்டுறவோடு நாட்டுப் பணியைச் செய்யவேண்டும் என்ருர். மண்டபத்தை விட்டு வந்து எட்டிப் பார்க்கும் அழகி, கவனத்துக்கு வந்தாள்! கிராமங்கள்தோறும் தொண்டர்களைத் திரட்டி விளேபாபோல் பணிசெய்வதே பலன் தரும் என்ருர்—பயந்து ஒதுங்கும் அழகியின் காட்சி கவனத்துக்கு வந்தது!!

காங்கிரசை எதிர்த்துக் கச்சைகட்டிக் கொண்டு இளம்பியவர்களில், பிரகாசரும் ஒருவர்! சோஷியலிஸ்டுக் கட்சியின் தந்தை எனக்கூடச் சொல்லலாம். அவர் என்ன செய்யவேண்டும்? கட்சியில் பொறுப்பேற்று, வலிவுள்ளதாக்கி, காங்கிரசுக்கு ஒரு கடிவாளமாக விளங்கவேண்டும்! இல்லாவிட்டால், விளேபாவின் வழியே நல்வழி என்று, அதே வேலையில் இருந்துவிட வேண்டும். அதையும்விட்டு, இதையும்விட்டு, புதுவழி ஒன்று சொல்லுகிருர்—எல்லா எதிர்க்கட்சிகளும், ஒரு ஐக்கியமாகக்கூடி, காங்கிரசோடு போய்ச் சேர்ந்து நாட்டு நலனுக்குப் பணியாற்ற வேண்டுமாம்! ஏதோ மிகப் பலம்பெற்று இங்கே கம்யூனிஸ்டுக் கட்சி விளங்குவதுபோலக் கருதிக்கொண்டு. அப்போதுதான் அதை எதிர்க்க முடியும், ஆகவே கூடுவீர் என்கிருர்! சுருங்கச் சொன்னல், "காங்கிரஸ் தலைவர்களே! எங்களை எல்லாம் இழுத்துவைத்துக்கொள்ளுங்களேன்" என்பது போல் தொனிக்கிறது குரல். உடனே அச்சம் குறுக்கிட, "அடடா! காந்தியடிகள் என்ன சொன்ஞர் தெரியுமா? கிராமம்தான் முக்கியம்! கிராம சேவைக்குத் தொண்டர்களைத் தயார் பண்ண வேண்டும்" என்கிருர்.

இந்திய உபகண்டத்தின் அரசியல் உலகில், ஒரு இடம் வகிக்கிறவர் இவர்! ஏடுகளும் வெளிநாடுகளும் மிகப் பெரியவர் எனக் கருதிப் போற்றும் கட்டத்திலிருப்பவர் — இவர்கள் எல்லாம், வெளியில் வந்து காங்கிரசின் ஊழல்களை விளக்கி, பலமான ஒரு கட்சியை நிறுவிக் காட்டினல் பலனிருக்கும். அந்த இடம் வரும்போது மட்டும், அச்சமுற்ற பெண்ணுகி விடுகிருர்கள்! ஆசை மோதும்போது, பேரம் பேசவும் துணிந்து விடுகிருர்கள்!!

★

# ஏழையாக நுழைந்தேன்! போகிறேன்!!

ஏழையாகவே நுழைந்தேன்! ஏழையாகவே வெளியேறுகிறேன்!!

பத்தாண்டுகள் பிரதமராக இருந்தேன்! இன்று பாமரனாகப்போகிறேன்!!

பைகளைப் பாரீர்! கைகளைப் பாரீர்!—எதுவும், கொண்டுவரவில்லை, எதையும் கொண்டுபோகவுமில்லை.

நூல்கள் எழுதினேன்! சம்பாதித்தேன்! அனைத்தையும், நல்ல காரியங்களுக்கு அளித்திருக்றேன். விபரம் வேண்டுமா? அதோ, அதையெல்லாம் விநியோகித்த அறக்கமிட்டி! கேட்டுக்கொள்ளுங்கள்! அதன் தலைவர் சாதாரணமானவரல்ல; நமது முன்னாள் தலைமை நீதிபதி!

பரிசுகள் பல வந்தன; வெளிநாட்டினர் தந்ததும் அதோ உள்ளன. எல்லாவற்றையும் சர்க்காருக்கும், என்னுடைய கட்சிக்கும் கொடுத்துவிட்டேன். நான் ஒன்றும் எடுத்துக்கொள்ளவில்லை.

கைவசம் சில 'சூட்'டுகள் உள்ளன—சர்க்காரின் பிரதமராயிருந்தபோது தைத்தது இவை. இனித்தேவையில்லை எனக்கு. பத்திரிகாசிரியர்களோ அல்லது நிருபர்களோ விரும்பினால், எடுத்துப்பயன்படுத்திக்கொள்ளட்டும்.

கடைசியாக ஒன்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். என் ஆட்சிக் காலத்தில்—இந்தப் பத்தாண்டுகளில், நானே அல்லது என் மனைவியோ, ஏதாவது தவறு செய்தோமா — பதவியை உறவினர்களுக்கோ, வேண்டியவர்களுக்கோ பலன்தரப் பயன்படுத்தினோமா என்பதை விசாரித்து அறிவிக்க ஒரு கமிஷனை நியமியுங்கள். என் ஆத்ம சோதனைக்காக, இதைச் செய்யுங்கள்.

*புல்லரிக்கிறது, படிக்க — பத்தாண்டுக்காலம் ஆட்சிப்பீடத்திலிருந்து பர்மிய நாட்டின் முடிசூடா மன்னனென விளங்கிய யூநூ; பதவியைத் துறந்துவிட்டார்! இப்படியொருஅறிக்கையும் விடுத்திருக்கிறார்!!*

*கட்சிக்குள்ளேயே கட்சி—சண்டை சச்சரவு—எதிர்க்கட்சிகளின் ஏசல்—இந்தச் சூழ்நிலையில், யாரோ இராணுவத்தின் மூலம் அரசைக் கைப்பற்றப் போவதாகத்தகவல் கிடைக்கவே தானே தன் பதவியை நூவின் எனும் தளபதி வசம் ஒப்படைத்துவிட்டு, விலகிக் கொண்டிருக்கிறார்.*

*அரசியல் உலகில் கொலுவீற்றிருந்தோர் குப்புற வீழ்வதும், சாமரம் வீசியவன் சர்க்காரில் அமர நேர்வதும் வியப்புக்குரியதல்ல. கடந்த பத்தாண்டுக் காலத்துக்குள், உலகத்தில்—ஏன்?—இந்த இந்தியத் துணைக் கண்டத்துக்குள்ளேயே, யாரார் வந்தார்கள், அவர்கள் எப்படியெப்படிப் போனார்கள் என்கிற பட்டியலை எடுத்தால், வேதனையும் விசித்திரமும் கலந்து விளங்கும்.*

*முதல் மாதம் அமைச்சராகப் பணி புரிந்தவர், அடுத்த மாதமே கேட்பாரற்றுப் போனதையும்; நிகரெனக் கிங்கெவருமிலையென விளங்கியவர்கள் நிற்க இடமில்லாமல் போனதையும் கண்டிருக்கிறோம். கொடுமைக்காரனாக விளங்கிய பரூக் மன்னன் முதல், உத்தமரெனப் போற்றப்பட்ட ஓமந்தூரார் வரை, அரசியல் வீழ்ச்சி, தன் முத்திரைகளைப் பதித்துக் கொண்டு சென்றிருக்கிறது.*

*கொடியவர்கள்வீழ்ந்தபோது, குதூகலித்தது உலகம். நல்லவர்கள் வெளியேற்றப்பட்டபோது, ச்சூ, ச்சூ, கொட்டிற்று. இரண்டாவது இடத்தை, உலகின் இதயத்தில் பெற்றிருக்கிறார், யூநூ. அதுவும், பதவியைத் துறந்து, அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கை, பலருடைய கண்களையும் கருத்தையும், கவரக்கூடியதாகும்.*

*பதவியிலிருந்து விரட்டப்பட்ட பரூக் மன்னனின் மாளிகையில் இரண்டாயிரம் கைக் கெடியாரங்களிருந்தன—மூவாயிரம் கைத்தடிகளிருந்தன. சீட்டுக் கட்டுகள் தங்கத்தால் இழைக்கப்பட்டது கிடந்தது, என்று பட்டியல்கள் தந்தார்கள். இதோ, பாகிஸ்தானில் பல மந்திரிகள் மீது, 'இவர் செவர்லட் கார் வாங்கினார்,' 'அவர், கடைக்கு சரக்குகளை குறைந்த விலையில் கொண்டுவந்தார்,' என்பது போன்ற குற்றச்சாட்டுகள் சாட்டப்படுவதைக் கேள்விப்படுகிறோம். நமது உபகண்டத்திலும், இப்படி வெளிப்படையாகத் தெரியவில்லையே தவிர, மந்திரியான ஒவ்வொருவரைப்பற்றியும், ஒவ்வொருவித வர்ணனை தந்த வண்ணம்தான் இருக்கிறார்கள், மக்கள்! மறைந்த பிரகாசம் அவர்களால் இன்று உயிரோடுள்ள பல மந்திரிகள் மீதே, பகிரங்கமாக இலஞ்ச ஊழல் குற்றங்கள் சாட்டப்பட்டு, சந்தி சிரித்தது கவனமிருக்கும். இப்போதும், காங்கிரசைவிட்டு வெளிவந்த பலர் "ஏ! வெங்காய பெர்மிட்", "ஏ, மிளகுபெர்மிட்", "ஏ! காண்டிராக்ட்" என்று இப்படி, பலரைப் பெயர் சொல்லி அழைக்கக் கேட்கிறோம். மந்திரிகளாயிருப்போரைக்கூட, 'பத்துஇலட்சம்', 'மாடிவீடு'என்றெல்லாம், பலமாதிரியான பெயர் சொல்லுகிறார்கள்.*

*உத்தமர் காந்தியோ, சன்மார்க்க போதனை புரிந்தவரோ இல்லாத இடம் பர்மா. அந்தப் பரம்பரையுமல்ல, யூநூ! எனினும், இன்று பதவியை விட்டு வெளி வந்ததும், பயமின்றித் தனது பத்தாண்டுக்கால நடவடிக்கைகளை விசாரித்துப்பார்க்கச் சொல்கிறார்—ஏழையாக நுழைந்தேன், ஏழையாகவே போகிறேன் என்று கூறுகிறார்!!*

*அரசியல் வாழ்வு என்பது, இன்று, அடாவடிக்கும், பலனும் பயனும் பெறுவதற்குமான சாதனமாகக் கருதப்படுகிறது. சட்டசபை — எப்படியாவது அங்கே ஒரு குழு — அதன் மூலம் மந்திரிப் பதவி — பிறகு...... பிறகு...... என்று கருதப்படக்கூடிய அளவுக்கு, காங்கிரசாட்சியில் ஆகிவிட்டது. மந்திரி என்றால், மக்கள் தொண்டன் என்பதுபோய்,"இரண்டு பை வைத்த சட்டை போட்டவர்கள்" என்று கூறுகிற அளவுக்கு, வந்துவிட்டது.*

*தூயவர்களும், தொண்டுள்ளம் கொண்டவர்களும் இருக்கலாம். எனினும் எப்படியோ, இந்தப் பத்தாண்டுக் காலக் காங்கிரசாட்சியில், இப்படியொரு இழுக்கும், கெட்ட பெயரும் ஏற்பட்டுவிட்டது. பொறுப்பான இடத்தில் உட்காரவைக்கப்பட்ட பலர், அந்த இடத்துக்கு இழுக்கும் பழிச் சொல்லும் வருமளவுக்கு நடந்துகொண்டிருக்கின்றனர்.*

*"இதை விசாரிக்க வேண்டும்! சுதந்திரம் வருவதற்கு முன் சாதாரணமாயிருந்த எத்தனை பேர் பணக்காரர்களாயிருக்கிறார்கள்? மந்திரியான பிறகும், அதற்கு முன்னும் இருந்த சொத்தின் தராதரம் என்ன? இதையெல்லாம் கண்டுபிடிக்க வேண்டும்" என்றுகூட, காங்கிரஸ் கட்சியில் சில தூய்மை விரும்பிகள், தீர்மானங்கள் கொண்டுபோனதுண்டு. ஏனோ! பெரிய உத்தமர்களிருந்தும் இந்த 'ஆத்ம பரிசோதனை'க்குத் தங்களை ஆட்படுத்திக்கொள்ளவில்லை!*

*யூநூ அறிவிக்கிறார் — அவர் எப்படியோ, தெளிவாக அறியோம்—ஆனால் இப்படி வெளிப்படையாக மனந்திறந்து அறிவித்திருப்பதே, ஒரு புதுமையாகும்.*

*அதனாலேயே, "ஏழையாகவே நுழைந்தேன்! ஏழையாகவே போகிறேன்!" என்பதைப் படிக்கும்போது, நம்மை அறியாமலே வியக்கத் தோன்றுகிறது. பாராட்டவும் தோன்றுகிறது.* ★

சிறுகதை

★

# வீடும் வெளியும்

சதானந்தம் வீட்டைத் திறந்து உள்ளே சென்றார். வீடு வெறிச்சோடி இருந்தது. களையிழந்து போன ஒரு உருவம் தன் முன்னால் நின்றால் எப்படி இருக்குமோ அப்படி இருந்தது அவருக்கு அந்த வீட்டைப் பார்த்தவுடன்.

சற்று முன்புவரை ஒளிவீசிக் கொண்டிருந்த விளக்கு மறைந்து விட்டது. மறைந்துவிட்டதா? இல்லை, இல்லை. சிறு குன்றின் மீது சுடர்விட்டுக் கொண்டிருந்த விளக்கு மலைமீதிருந்து ஒளிவிடப் போகிறது; அதன் ஒளி அருகாமையிலுள்ள இந்தக்குன்றுக்கு மட்டுமல்ல, நெடுந்தூரத்திலிருக்கும் வேறு பல இடங்களுக்கும் பரவப்போகிறது. இதை எண்ணியவுடனேயே அவருடைய உள்ளத்தில் ஏற்பட்ட சோர்வான எண்ணங்களெல்லாம் பறந்து போய் ஒருவகை குதுகுதுப்பு ஏற்பட்டது. மனிதன் ஒன்றை அடைய வேண்டுமானால், மற்றொன்றைத் தியாகம் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் எண்ணியதை அடைய முடிவதில்லை. இதை அவர் தனக்குத் தானே சொல்லிக்கொண்டார்!

அவர் வலது புறம் திரும்பிப் பார்த்தார். எதிரே தன்மகனுடைய நிழற்படம் பெரிய அளவில் சிரித்துக்கொண்டிருந்தது. இனி அவருக்கு இந்தப் படந்தான் துணை. ஏதேனும் தன் மகனுடன் பேச வேண்டுமென்றால் இந்தப் படத்துடன்தான் பேச வேண்டும். இதை எண்ணியவுடன் மீண்டும் அவர் மனம் துணுக்குற்றது. மெள்ளத் தலையைக் குனிந்து கொண்டார். கடல் அலைகளினிடையே சிறு மரத்துண்டு சிக்கிக் கொண்டால் எப்படி அலைப்புறுமோ அதைப்போலத்தான் அவர் மனமும் ஆகிவிட்டது. குனிந்த தலையை நெடுநேரம் வரையிலும் குனிந்தே வைத்திருக்கும் நிலையிலும் அவர் இல்லை. மீண்டும் தலையை நிமிர்த்தித் தன் மகன் படத்தைப் பார்த்தார். 'அப்பா நான் எங்கிருந்தாலும் உங்களவன்தானே' என்று கூறுவது போலிருந்தது அவருக்கு. கண்களிலிருந்து இரண்டுசொட்டு நீர்த்திவலைகள் உருண்டு ஓடின. இந்தக் கண்ணீருக்குக் காரணம்? பிரிவா? அன்பா? பாசமா? அல்லது ஆனந்தமா? இதில் எது என்றே அவரால் நிதானிக்க முடியவில்லை. நிதானிக்கும் நிலையிலும் அவர் இல்லை. மனம் என்பது ஒரு குழந்தையைப் போன்றது. அதற்குச் சில வேளைகளில் அழுவதும் சிரிப்பதும் எப்போது

**கரந்தை—கணேசன்**

என்பதே தெரிவதில்லை. இல்லாவிட்டால் சதானந்தம் தன் மகன் வேலை பார்க்க வெளியூர் செல்லப் போகின்ற இந்த நல்ல வேளையில் இப்படிப் பதைப்புறுவாரா?

மூன்றாவது முறையாக தன் மகனுடைய படத்தைப் பார்க்க வேண்டுமென்று அவர் மனம் எண்ணியது. அதற்குள் வேறு ஒரு மனம் அதைத் தடுத்துவிட்டது. தன்னுடைய இந்த நிலையை வேறு யாராவது கண்டுவிட்டால் என்ன நினைப்பார்கள்...? என்ன நினைத்தால் என்ன? நம் மனத்தின் நிலையில் அவர்கள் இருந்தால் அல்லவா தெரியும்? கேள்வியைத் தானாக எழுப்பி அதற்கு மறு கேள்வி தொடுத்தாரேஒழிய மற்றவர்கள் பார்த்தால் இப்படிப் பட்டமனம் இளகக்கூடிய நம்மைப் பார்த்து நகைக்கத்தானே செய்வார்கள் என்று எண்ணியபடியே மகனுடைய நிழற்படமிருந்த அந்த இடத்தைவிட்டு வெளியேறினார்.

ஏதாவது புத்தகத்தை எடுத்துப் படித்தால் தான் மனம் அமைதியுறக்கூடுமென்று எண்ணியவராய் அலமாரியின பக்கம் சென்று ஒரு புத்தகத்தை எடுத்தார். புத்தகத்தை எடுக்கும் போதே அலமாரியினவேறு புறத்திலே தன் மகன் படித்த புத்தகங்கள் சில கண்ணிலே பட்டது. அதிலே ஒன்றை எடுத்துப் பார்க்கவேண்டுமென்ற எண்ணம் தானாகவே உண்டாயிற்று. ஒன்று ......இரண்டு......மூன்று எல்லா நூல்களுமே ஆங்கிலமாக இருந்தன. இவருக்கோ ஆங்கிலம் என்றால் அதுஒரு மொழி என்பதைத் தவிர, வேறு எதுவும் தெரியாது. இருந்தாலும் அந்த நூல்களைக் கையிலே எடுத்துப புரட்டும் போது தனி இன்பம் இருக்கத்தான் செய்தது. இவ்வளவையும் படித்துத்தான் பட்டம் பெற்றிருக்கிறான் தன் மகன் என்று எண்ணியவுடன், மேலும் இன்பத்தின் வேகம் அதிகபபட்டது. உறவினர்கள் இறந்தவர்களின் பொருள்களை ஏன் பத்திரமாகப் பாதுகாக்கிறார்கள் என்ற உண்மையை இப்பொழுது அவரால் உணர முடிந்தது. தொலைதூரம் வேலைக்குப் போயிருக்கிற தன் மகனைப்பற்றித் தன் நினைவே இப்படியென்றால்...? என்றது அவர் மனம். இன்பத்தின் உச்சம் பேரின்பம் என்பார்கள். ஆனால்

இப்போதோ.........இன்பத்தின் உச்சம் பெருந் துன்பமாகத்தான் ஆயிற்று சதானந்தத்திற்கு. இவ்வளவு நூல்களையும் இனி யார் வந்து தினம் தினம் எடுத்துப் படிக்கப் போகிறார்கள்? இதை எண்ணியவுடன் யாரோ முள் கொண்டு தன்னைக் குத்துவது போன்று பட்டது அவருக்கு. புத்தக அலமாரியை விட்டு நீங்கியவராய் மெல்லச் சென்று நாற்காலியில் அமர்ந்தார். ஆனால் அவர் மனம் பறந்துகொண்டே இருந்தது. மனம் என்பது இலவம் பஞ்சைப்போன்றது. எண்ணங்களாகிய காற்றுச் சுழலும் திசையிலேயே அதுவும் சுழலத் தவறுவதில்லை.

நாற்காலியில் அமர்ந்தவாறே அவர் நினைவுக் கனவுகளிடையே மிதக்க ஆரம்பித்தார்.

எத்தனையோ ஆண்டுகளாகக் கொண்டிருந்த தன் ஆவல் இன்று நிகழ்ந்துவிட்டது. அதற்காகத்தான், தான் ஒருவனே ஆகி தன் மகன் வாழ்வின் ஒவ்வொரு பகுதியையும் கண்காணித்துப் பெரியவனாக்கினார். தன் மகன் பிறந்த அன்றே மனைவி காலமாகி விட்டாள். அதற்குப்பிறகு, அவர் திருமணமே செய்துகொள்ள வில்லை. மறுமணம் குறித்து யார் யாரோ, ஏதேதோ சொல்லிப் பார்த்தார்கள். அவரிடம் ஒன்றும் பலிக்கவில்லை. அவர்களிடமெல்லாம், தன்னுடைய குழந்தையைக் காட்டி 'இந்த இரத்தினத்தை ஒளிபெறச் செய்வதிலே தான் என்னுடைய வாழ்வின் இன்பம் நிறைவு பெறுகிறது' என்று கூறிவிட்டார். தன் மகன், தான் என்ற இரண்டே அங்கங்களைக்கொண்டு எழுதப்பெற்றது, தன் வாழ்வின் பிற்பகுதி என்பதிலே அவருக்கு அழுத்தமான நம்பிக்கை, அதில் மற்றவர்களுக்கு இடமில்லை.

குழந்தைப் பருவத்திலிருந்து வளர்த்துப் பெரியவனாகி வாலிபப் பருவம் எய்தியுள்ள தன் மகனுடைய இந்தப் பருவம் வரை நடைபெற்றவைகளை அவர் ஒரு முறை எண்ணிப்பார்த்தார். 'அப்பாடா, எவ்வளவு கஷ்டங்கள்' ஆனாலும் அவைகள் யாவும் தன் மகனுடைய முன்னேற்றம் என்கின்ற இனிய கனவிலே கரைந்து மறைந்தே போயிருக்கின்றன. இன்று அந்தத் துன்பங்களை எண்ணிப் பார்ப்பதிலே ஒரு இன்பம்.

"தந்தை மகற்கு ஆற்றும் நன்றி, அவையத்து
முந்தி இருப்பச் செயல்"

இவர் அடிக்கடி மனத்துக்குள் சொல்லிக்கொள்ளும் பொன்மொழி. இந்தப் பொன்மொழி பல நேரங்களில் உள்ளத்தில் தளர்ச்சி நேரும் போதெல்லாம் பயன்பட்டிருக்கிறது. 'தந்தை மகற்காற்றும் உதவி' முடிந்துவிட்டது. தன் கடமை முடிந்துவிட்டது. இனி நடைபெறவேண்டுவது, 'மகன் தந்தைக்காற்றும் நன்றி' தான். அந்தக் குறளையும் ஒரு முறை வாய்விட்டே கூறினார்.

"மகன் தந்தைக்குஆற்றும் உதவி இவன் தந்தை
என்னோற்றான்கொல் எனுஞ் சொல்"

அந்தச் சொல்லுக்காகத்தான் தன் மகன் தன்னை விட்டுப் பிரிந்து சென்றிருக்கிறான். அந்தச் சொல் தன் காதிலே விழுந்து விட்டால்......... இந்த உலகமே சதானந்தத்திற்குச் சுவர்க்கமாகி விடும். 'சுவர்க்கமென்பதுகற்பனை. இது கண்கூடு' அதைவிட இது தானே சுகமானது என்று எண்ணினார்.

நாளை மறுநாள் கழித்துத் தன் மகனிடமிருந்து கடிதம் வரும். அதில்தான் பணியாற்ற ஒத்துக் கொண்டதும், திட்டமிட்டுச் செயலாற்ற முனைந்திருக்கும் முறையும், தான் கண்டதும், கேட்டதும். இன்னும் இவைபோல்வன பலவும் இருக்கும். அதைத்தான் படிக்கும் பொழுதே...... இதை எண்ணியவுடனே வான ஊர்தியிலே பறப்பது போன்று இருந்தது சதானந்தத்திற்கு.

இதுவரை தன் மகன் தனக்கு ஒரு கடிதம்கூட எழுதியதில்லை என்பதை எண்ணினார். எண்ணியவுடனேயே அவரை அறியாமலேயே அவருக்கு மெல்லிய நகை தோன்றியது. 'எங்கே நம் மகனை வெளியில் விட்டோம்! பள்ளிப் படிப்பிலிருந்து கல்லூரிப் படிப்பு வரை உள்ளூரிலேயே முடிந்து விட்டது. அதுமட்டுமல்ல, பொற் கூண்டுக்குள்ளே பூட்டிவைத்து வளர்க்கும் கிளியைப்போல வளர்த்துவிட்டிருக்கிறோம். துன்ப நிழலே அவனைத் தொட்டது கிடையாது. தாயற்ற பிள்ளை, ஒரே பிள்ளை. அப்படி இருக்கையில் அவன் வெளியூர் செல்லவோ, கடிதம் எழுதவோ சந்தர்ப்பம் இல்லையே'' என்று கூறிக்கொண்டார்.

ஆனால் ஏதோ ஒரு சமயம் தன் மகன் கடிதங்கள் எழுதியதுபோல நினைவு வந்தது. ஆம், மூன்று கடிதங்கள்......கல்லூரியில் மாணவர்கள் யாவரும் சுற்றுலாச் சென்றபொழுது எழுதப்பட்டது. சுற்றுலாக்கூட ஐந்து நாட்கள தான். போக ஒரு நாள், வர ஒரு நாள், மீதம் சுற்றிய நாட்கள் மூன்று. இந்த மூன்று நாட்களிலும் மூன்று கடிதங்கள் எழுதப் பட்டன. கடிதங்களா அவைகள், கரும்புத்துணுக்குகள். இல்லை, இல்லை; கற்கண்டுக்கட்டிகள். கரும்புகளில் துணுக்குக்குத் துணுக்கு சுவை குன்றவும்கூடும். அவைகள் கற்கண்டுக் கட்டிகளே. அப்பொழுதுகூடச் சதானந்தத்திற்கு மகனை அனுப்பிவைக்கப் பிரியம் ஏற்படவில்லை. ஆனால் அவன் ஒற்றைக்காலில் நின்றான். அதன் பிறகு பிரிவினால் பட்ட வேதனை அவருக்கல்லவா தெரியும். அவனுடைய மூன்று கடிதங்களும்கூட, சுரம் வந்தவனுக்கு 'யுடிகோலனில்' நனைத்த துணியை நெற்றியில் போடுவது போல் இருந்ததே தவிர, முழுமையும் தனிமையின் துயரை அகற்றி விடவில்லை. கற்கண்டும் வாயில் இருக்கும்வரை தானே சுவைக்கிறது.

அந்த மூன்று கடிதங்களையும் மறுமுறையும்எடுத்துப் படித்தார். முதற் கடிதத்தில், "சுற்றுலா செல்வது என்பது மிகவும் இன்பகரமாகத்தான் இருக்கிறது. சகோதர மாணவர்கள் பலருடன் பலப்பல பேசிச் செல்லுவது, புதுப்புது இடங்களைப் பார்ப்பது எல்லாம் இன்பம்தான். ஆனால், அப்பா!...... அடிக்கடி உங்கள் நினைவு வந்துவிடுகிறது. அப்பொழுதெல்லாம் இந்தச்சுற்றுலா சற்றுக் கசந்துவிடுகிறது. அதோடு தங்களைப் பார்க்க இன்னும் மூன்று நாட்கள் ஆகுமே என்று எண்ணும் பொழுது என் மனத்திற்கு என்னவோபோல் இருக்கிறது. உடனே விமான மேறிச் செல்லலாமா என்றுகூட எண்ணுகிறேன். இருந்தாலும், ஒன்று...... இரண்டு...... மூன்று

விரல்களை மடக்கிக்கொண்டே இருக்கிறேன்'' என்று எழுதியிருந்தான்.

இரண்டாவது கடிதத்தில், "அப்பா இன்னும் இரண்டே இரண்டு நாட்கள்தான். நேற்றிரவு "அப்பா...... அப்பா...... என்று அழைத்தேனாம். எல்லோரும் என்னைக் கேலி செய்கிறார்கள். அவர்கள் இடக்கிறார்கள்'' என்று எழுதி இருந்தான்.

மூன்றாவது கடிதத்தில், ''நாளை நான் அங்கே, உங்கள் முன்னே இருப்பேன். நான் கண்டதெல்லாம் கூறுவேன். இந்த நான்கு நாட்களில் எவ்வளவு செய்திகளை நாம் பேசாமல் விட்டுவிட்டோம். எவ்வளவு செய்திகளைத் தெரிந்துகொண்டிருக்கிறேன். வருகிறேன். நாளை இரவு நல்ல கச்சேரிதான். தேனீர் போட மறந்துவிடக் கூடாதப்பா'' என்று தீட்டியிருந்தான். யாழின் மூன்று நரம்புகளிலிருந்தும் எழும் இனிமையான கானத்தைப் போன்ற இந்தக் கடிதங்களிலேயே நாளை மறுநாள் காலைவரை கழித்துவிடலாம் என்று சதானந்தம் முடிவு செய்தார்? மூன்றாம் நாள் கடிதத்தை எதிர்பார்த்தார். தபாற்காரன் வேறு எதையோ கொடுத்து உபத்திரவத்தை அதிகப்படுத்தினானே தவிர, இவர் எதிர்பார்த்த கடிதத்தைத் தந்தானில்லை. மெல்ல தனக்குத்தானே சமாதானம் செய்துகொண்டார்; "உத்தியோகப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுவதற்கே நேற்றைய பொழுது கழிந்திருக்கும்'' என்று.

மறுநாள் அஞ்சல் நிலையத்திற்கே காலையில் சென்றுவிட்டார். உள்ளே அஞ்சல்களைப் பிரித்துக் கட்டிக்கொண்டிருக்கும் தபால்காரனை 'பசித்தவன் பிறர் முகம் பார்ப்பது போல' பார்த்துக்கொண்டிருந்தார். அஞ்சலாளன் உதட்டினாலேயே பதில் சொன்னான். அன்றும் கடிதம் வரவில்லை. கடிதம்வரவில்லை என்றவுடனேயே மனம் திகீரென்றது. '' போன இடத்தில் எதிர்பாராத விதமாக ஏதாவது''...! தந்தியாவது அடித்துக் கேட்கலாமா என்றுகூட எண்ணினார். மனதை ஒருவாறு தேற்றியவராய், நாளை கடிதம் வரவில்லை என்றால் போய்ப் பார்த்துவிட்டு வந்துவிடுவது என்ற முடிவுடன் வீடு திரும்பினார்.

*

கடிதம் கையிலே கிடைத்தவுடன் தன் மகனே முன்னே வந்து நிற்பதுபோல நினைவு எழுந்தது சதானந்தத்திற்கு. பசித்துக் கிடந்தவனுக்கு பாலும் சோறும் கிடைத்தால் எப்படி இருக்குமோ அந்த நிலையில் கடிதத்தைப் பிரித்தார்.

கடிதம் மிகப் பெரியதாக இருக்கும், காவியத்தின் உருவம் அதிலே தெரியும், அவர் எதிர்பார்த்தபடி இத்தனை நாட்களாகக் கடிதம் எழுதாமைக்கு மன்னிப்புக் கேட்டிருப்பான் என்றெல்லாம் எண்ணியபடி கடிதத்தைப் பார்த்தார். கடிதம் முற்றிலும் வேறானதாக இருந்தது.

அப்பா!

நான் உடன் கடிதம் எழுதவில்லை என்று என் மீது கோபிப்பீர்கள், அதற்காக நான் தங்களிடம் மன்னிப்புக் கேட்கப் போவதில்லை. ஏன் தெரியுமா? கடிதத்தை முழுதும் படித்தவுடன் அதற்கான காரணத்தை நான் கூறாமலேயே தெரிந்துகொள்வீர்கள்.

நான் முன்பெல்லாம் நமது வீட்டைப் பொன் மாளிகை என்று எண்ணுவதுண்டு. அந்தப்பொன் மாளிகையிலே, எல்லை கடந்த சுகமிருக்கிறது; அந்தச் சுகம்தான் மனித வாழ்வு என்று எண்ணியிருந்தேன். இன்று என் அனுபவம் வேறு......

நான் பிறந்தது முதல் துன்பத்தின் சாயலே படியாமல் என்னை வளர்த்தீர்கள். எதைக் கேட்டாலும் இல்லை என்னாது தந்தீர்கள். என் பின்னாலே நிழல் போலத் தொடர்ந்து இதம் தந்தீர்கள். என்னைக் கலைமுதல்வனாக்கினீர்கள். ஆனால் ஒன்றை மட்டும் நான் பெறாமல் செய்து வைத்திருந்தீர்கள். நான் இதைக் குற்றமாகக் கூறி உங்களைக் குற்றக் கூண்டிலே நிறுத்துகிறேன் எனக்கருதிவிடவேண்டாம். அந்த ஒன்றை நான் பெறாமல் போனதற்குக் காரணம், தங்களின் தலையாய அன்புதான். அன்பு சில வேளைகளில் தவறான விளைவுகளை ஏற்படுத்திவிடும் என்பதைத் தற்பொழுதுதான் உணர்கிறேன். இல்லாவிட்டால் இது நாள் வரை குவலயம் அறியாக் குருடனாக இருந்திருப்பேனா? நம் வீட்டைப் போலவேதான் வெளியும் இருக்கிறது என்று கருதிக்கொண்டிருப்பேனா?

நான் வேலையை ஒத்துக்கொண்ட அதே அலுவலகத்தில் என்னோடு படித்த, என்னோடு ஒத்த பட்டம் பெற்ற என் நண்பனைக் கண்டேன். அவன் எனக்குக் கீழே வேலைசெய்யும் சாதாரண எழுத்தாளன். நானோ அவனுடைய அதிகாரி. அவன் என்னோடு பேச எத்தனித்தாலும், எனக்கு அவனோடு பேச மனம் கூசுகிறது. வேலை பல தேடிக் கிடைக்காததால், கடைசியில் கிடைத்த இந்த வேலையையும் விடமுடியாமல் வந்திருக்கிறான். ஒரே படிப்புக்கு இத்தனை வேற்றுமையா? சே...!

மறுநாள் நான் ஒரு குக்கிராமத்திற்குப் போகவேண்டியிருந்தது. அங்கே என்னை மிகவும் மரியாதையுடன் வரவேற்றார்கள். அவர்களுடைய குடிசையாகிய மாளிகைக்குச் சென்றிருந்தேன். 'தென்றல் உள்ளே வர மறுக்கிறது என்றுதான் இப்படிக் கூரையைப் பொத்தல்களிட்டு வைத்திருக்கிறார்கள்' என்றாவது காவிய உள்ளம் படைத்திருந்தால் நினைத்துக் கொள்ளலாம் — அந்தக் கற்பனையில் என்னால் மிதக்கமுடியவில்லை. குடிசைக்குள்ளே சென்றேன்; ஒரே குமட்டல்—துர்நாற்றம். அவர்கள் உழைப்பதோ கழினியில்; அவர்கள் நமக்கு உணவு இடுகிறார்கள். அவர்களின் நிலையோ...வறுமையும் அறியாமையும் சேர்ந்து அவர்களை வதைக்கும்நிலை. அவர்களும் நம்மவர்கள்தானே என்று எண்ணும்போது என் உள்ளம் பதறுகிறது.

அந்தக் கிராமத்திலுள்ளவர்கள் அனைவரும் காலை முதல் மாலை வரை உழைக்கிறார்கள். பின் ஏன் இப்படி இருக்கிறார்கள்? இந்தக் கேள்விக்கு விடை? என் மனம் ஓயாமல் குடைகிறது. பிறப்பிலே உயர்வு தாழ்வு இல்லை என்கிறோம். வெளியிலே எத்தனை குழந்தைகள் கையேந்தி நிற்கின்றன. அக்குழந்தைகள் எல்லாம் இந்நாட்டுச் செல்வங்கள். செல்வங்களே இப்படிச் சீரழிந்தால், நாட்டு நிலை எப்படி? செல்வமாகிய பணத்திற்கு இருக்கிற பாதுகாப்பில் துளிகூட இந்தப் பிறவிச் செல்வங்களுக்கில்லையே!

அப்புறம் ஒரு விசித்திரமான வழக்கைச் சந்தித்தேன். ஒருவன் மிகவும் நல்லவனாம்; வசதியானவனும்கூட. ஆனாலும் திருடியிருக்

றன். கேட்டதிற்கு 'அப்பொழுதுதான் தனக்கு வாரிசு இருக்கும். ஏனென்றால் அது குலத் தொழில்; குலத் தொழிலை மறக்கக் கூடாது. அது தொன்று தொட்டு வரும்முறை' என்கிறன். சமுதாயத்தினுடைய கண்கள் எப்படித் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன?

'மன்னித்துவிடவா' என்றேன் 'இல்லை, இல்லை; இப்பொழுது மட்டும் சிறைக்கு அனுப்பிவிடுங்கள். சிறையில் சில நாட்களாவது இருக்கவேண்டும். இனி அவ்வாறு செய்யமாட்டேன்' என்றன். எப்படியப்பா வழக்கு?

இதையெல்லாம் எண்ணிப் பார்க்கும்பொழுது இதுவரையிலும் இருண்ட குகையிலே உலவிக்கொண்டிருந்தோமோ என்ற ஐயம்கூட எழுகிறது.

அப்பா! நமது வீடு நல்ல குதுகுதுப்பாக இருக்கிறது; ஆனல் வீட்டுக்கு வெளியே எவ்வளவு பெரிய அனல் வீசிக்கொண்டிருக்கிறது தெரியுமா? இந்த அனலில் மற்றவர்கள் — நம்மவர்கள் அவதிப்படும்பொழுது நாம் மட்டும் சுகமாக இருப்பதா? இந்தச் சுகம் தான் நமக்கு எத்தனை காலத்திற்கு நிலைக்கும்? அனல் நம்மையும் அடைய எவ்வளவு காலம் ஆகும்? சூருவளி சுழன்று அடிக்கும் பொழுது பெரிய தீபமாக இருந்தாலும் அது பிழைத்துவிடவா முடியும்? முடியாதப்பா, முடியாது" எனக்குத்தற்பொழுது இரண்டே இரண்டு பாதைகள் தான் தெரிகின்றன. ஒன்று அந்த அனலை மாற்றித் தென்றலைக் கொணர முயன்று வெற்றி பெறவேண்டும், அல்லது அந்த முயற்சியிலேயே அழியவேண்டும்.

அன்பான மகன்,
**மணிவண்ணன்.**

●

சதானந்தம் அந்தக் கடிதத்தை மறுமுறையும் படித்தார். கண்களை அகலவிரித்து மூடிக்கொண்டார். மூடிக்கொண்ட அவர், கடிதத்திலுள்ள நிகழ்ச்சிகளைத் திரையிட்டுப் பார்த்தார். திரையிடும்போது 'வீடும் வெளியும்' என்ற மணிவண்ணனின் இரக்கமான குரல் அவரை எங்கோ அழைத்துப் போவதுபோல இருந்தது.

★

# “வரி”க் கொள்ளை!

—[கா. வேழவேந்தன்]—

"எழில்வளை! ஈரிரண்டு நாட்களாக நீ ஏன் என்னிடம் சரிவர உரையாடுவதில்லை? நாடெல்லாம் தான்கண்ட வெற்றியின் பீடு நோக்கி மகிழ்ச்சியில் ஆழ்ந்து கிடக்கிறது; உனக்கு மட்டும் என்ன நேர்ந்துவிட்டது? ஒரு வேளை கடந்துபோன தென்பாண்டிப் போரில் சோழவள நாட்டின் மானங்காக்கத் தன் உயிரைக் காணிக்கையாக்கிய உன் அண்ணனை எண்ணி வருந்துகின்றாயா? உண்மைதான். அவர் மட்டும் இருந்திருந்தால் சோணாட்டுக்குக் கிடைத்திருக்கும் இந்த மாபெரும் வெற்றிகண்டு எத்தனை பூரிப்படைந்திருப்பார்?... உம்..."

"தேன் குழல்! என் கவலை அதுவல்ல; சிங்காரத் தாயகத்தின் சீர் காக்கத் தன் மூச்சினையே பணயமாக்கிய என் அண்ணன் தான் என் நெஞ்சத்திலேயே குடிகொண்டிருக்கிறரே, அவரைப்பற்றி நான் ஏன் கவலைப்படப் போகிறேன்?"

"பின் உனக்கு என்ன வந்தது? ஒரு வேளை கடற்கொள்ளையரைத் தோற்கடித்து வந்த பொன்னி நாட்டு வீரரில் தன் குடிக்கென்று ஓர் ஆண்மகன் இல்லாமற் போனனே என்று வருந்துகின்றாயா?"

"அதுவும் அல்ல. வேழமடை வேந்தனும் நம் சோழ மன்னன் தன்படையில் ஓரிரண்டு வீரர்கள் குறைந்துவிடுவதால் மட்டும் வெற்றியை நழுவவிட்டுவிடுவதில்லையே! உறக்கத்திலும் போர்க் கனவு காணும் பொன்னிவள நாட்டு வீரரும், ஒப்பிலா வளவனும் இருக்கும்வரை தோல்வி என்ற சொல்லே காவிரி நாட்டின் எல்லைக்கப்பால் அல்லவா உலவ முடியும்!"

"நன்று நன்று. எழில்வளை! பின் நீயே சொல்லிவிடு. உன் தங்க முகத்தில் வழக்கமாக ஒளிரும் புத்துணர்ச்சியைக் காணேமே, ஏன்? ஒருகால் உன் அன்னையார் அங்காடியிலே வாங்கி வந்த பிறைச்சிந்தாக்கு உன் கழுத்துக் கேற்ற அணியாக அமையவில்லையோ? ஆமாம். உன் அன்னை உன்னையும் உடன் அழைத்துச் செல்ல மறந்துவிட்டார்கள். இதற்கெல்லாம் ஏன் வீண் கவலைப்பட வேண்டும்?"

"போதுமடி! பிறைச்சிந்தாக்கில் ஒன்றும் பிழை இல்லை; அருமையாக அமைந்திருக்கிறது அந்த அணி; ஆனல் இந்த நாடு செல்லும் போக்கைக்கண்டால்தான்..."

"ஏன் உனக்கு இந்தப் புதுவித ஐயப்பாடு? நாடு செல்லும் பாதையிலே என்ன கேடுறும் முறையைக் கண்டுபிடித்து விட்டாய்? இத்தனைநாள் மொத்தமாகப்பழகி வரும் என்னிடம்கூடச் சொல்லாமல் அப்படி எதைப்போட்டுக் குழப்பிக்கொள்கிறய்?"

"நாடு என்றல் இந்த நாட்டிலே வாழும்ஒவ்வொருவரையும்பற்றித் தான குறிப்பிடுகிறேன்!"

"கொஞ்ச நேரத்திற்கு முன்பு தானே சொன்னய்! மன்னன் மறவர்குல திலகம்; மங்காப்புகழ்,

(11-ம் பக்கம் பார்க்க)

# கால்மணி நேரமாவது.....

( மாண்மகிழன் )

படிப்பது ஒரு உன்னதக் கலை. உள்ளத்தைப் பண்படுத்தும் ஒரு உயரிய கலை. உலகின இயக்கங்களை ஆழ நோக்க உதவும் ஒரு அற்புதக் கலை. இக்கலை கருக்கொண்டுள்ள பயன்களோ அதிகம்! அவை படிப்பவர்க்கு வெளிச்சம் தருவன. படிப்பவர்கள் உணர்ந்து உண்மையைச் சொல்லுகிறார்கள். உலகில் உண்மைகளைக் கூடப் பதம் பார்க்கும் சக்திகள் இல்லாமலா இருக்கின்றன? இருந்தாலும் இவ்வுண்மையைப் பொறுத்தமட்டில் அச்சக்திகளும் நெருங்க நாணுகின்றன. எத்தனையோ படிக்க வேண்டுமென்று ஆவல் தான்; என்ன செய்வது? தொல்லைபடர்ந்த நிலை என்று அங்கலாய்க்கின்றன. இப்படித்தான் இவ்வுண்மையை ஒத்துக்கொள்ளும் ஒவ்வொன்றும் பகர்கின்றன. அனுபவமே இல்லாத அவை இவ்வொழுங்கில் 'கற்றல் நன்று... கற்றல் நன்று' என்று வேறு கதைக்கின்றன. புரிந்துகொண்டு அத்தகையவைகளை அணுகி, "ஏன் படிப்பதைத் தொடரவில்லை?" என்று கேட்டுவிட்டால் போதும், உடனே கடைமடை வெள்ளமபோல் தொல்லைகளின் விரிவான வியாக்கியானம் ஆரம்பித்துவிடும். ஒருங்கே அத்தகைய பட்டயம் அடிப்பவர்கள் 'நேரமின்மை'யின் மேல் பழியைப் போடுகிறார்கள்! அதே நேரத்தில் வீணாக்குவதெல்லாம் நேரத்தையே! ஆனால் உண்மை அதுவல்ல. மனமில்லை! படித்தவர்கள் எல்லாம் என்ன வாரிக்கொண்டார்கள் என்ற அபூர்வதத்துவத்தின்மேல் இருக்கும அளவு கடந்த நம்பிக்கை!

படிக்கவேண்டும் என்று ஆவல் இருந்தால், ஒரு நாளைக்குப் பதினைந்து நிமிடங்களைச் சிறப்பாக உபயோகித்துக்கொண்டால் போதுமே. எல்லோராலுமே பதினைந்து நிமிடங்களைப் படிப்பதற்கென்று ஒதுக்க எளிதாகுமே! அப்படி உபயோகப்படுத்திய அப் பதினைந்து நிமிடங்கள் பெரும்பயனைத் தருமே!

ஒரு நடுநிலை வாசகர், ஒரு நடுநிலைப் புத்தகத்தை நிமிடத்திற்கு 300 சொற்கள் வேகத்தில் படிக்கலாம். படிப்பதை வழக்கமாகக் கொண்டாலொழிய இந்த வேகத்தைப் பிடிப்பது கடினம்! நுட்பமான விஞ்ஞான நூல்களையோ, விவசாய நூல்களையோ, வர்த்தக நூல்களையோ படிக்கும்போது குறிபபிட்ட வேகத்தில் செல்ல முடியாது. அரும்பொருள் புதைந்துள்ள கவிதைத் துணுக்குகளைப் படிக்கும்போதும் அந்தத் துரிதம் வராது. ஆனால் நல்ல நாவல்களையோ, சுவையான வரலாறுகளையோ புரட்டும்போது அந்த வேகம் எளிதாக அமையும்! முழுப்பொருளைப புரிந்துகொள்ள இன்னலும் இருக்காது. ஒருமணியில் ஒரு விநாடி கூட வீணாக்காமல் இத்தகைய நூல்களைப் படிக்க முடியும்.

ஒரு நடுநிலை வாசகர் நிமிடத்திற்கு 300 சொற்களைப் படிப்பாரானால், பதினைந்து நிமிடங்களில் 4,500 சொற்களைப் படிப்பாரல்லவா? ஒருவாரத்தில் நாளொன்றுக்கு பதினைந்து நிமிடங்களைப் படிக்கச் செலவழித்திருந்தால் 31,500 சொற்களைக் கடந்திருப்பாரல்லவா? வாழ்நாளில் ஒரு மாதத்தை இழந்ததும் 126,000 சொற்களின் பயனைத்துய்த்திருப்பாரல்லவா? ஒருஆண்டு இறந்ததும் திரும்பிப்பார்த்தால் 1,512,000 சொற்களின் இனிப்பு உயிர்பெற்றுலவுமல்லவா? ஒரு நாளில் பதினைந்துநிமிடங்களைப்பயன்படப் படித்தால் எத்தனை திருப்தி! ஒரு ஆண்டில் அது வழங்கும் உவகைதான் எத்தனை! வளர்ச்சிதான் எத்தனை!

நூல்கள் பொதுவாக 60,000 சொற்களிலிருந்து 100,000 சொற்கள் வரை நீளத்தில் மாறுபடும். சராசரியில் ஒரு புத்தகத்தின் பொது நீளம் 75,000 சொற்களின் கூட்டு. ஒரு நாளில் கால்மணி நேரத்தைப் படிக்க ஒரு நடுநிலை வாசகர் தவறாமல் பயன்படுத்துவாரானால், ஒரு ஆண்டில் 20 நூல்களையாவது படித்திருப்பார். ஆண்டொன்றுக்கு 20 புத்தகங்களைப் படித்தால்... எத்தனையோ சேதிகளை உணர்ந்துகொள்ளலாம்! மண்ணில் தவழும் எத்தனையோ விந்தைகளை அறிந்திருக்கலாம்! பயனுள்ள அந்த நூல்கள் தந்த இன்பம் கொள்ளையாக இருந்திருக்கும்! இவ்வளவும் துன்பமே இல்லாமல் பெறும்பயன்! விளையாட்டுத்தனமாகக் கொழித்துக்கொள்ளும் அறிவு வினை!

அமெரிக்காவில் பொது நூல்நிலைய வாசகர்கள் ஆண்டொன்றில் 80 புத்தகங்களைப் படிக்கிறார்கள்! இத்தனை பெரிய சாதனைக்கு அவர்கள் செய்த முயற்சி—தந்த உழைப்பு எவ்வளவு தெரியுமா?... ஒரு நாளில் ஒரே ஒருமணி நேரத்தைப் படிக்கச் செலவழித்தது தான்! எத்தனை குறைவான மூலதனம்! எத்தனை அதிகமான இலாபம்! ஒரே ஒருமணி நேரம் படிக்க ஒதுக்கி அடைந்த பயன் எவ்வளவு! எத்தனை எளிதானது. நாமும் பயனுள்ள காரியத்திற்கு ஒரு மணி நேரத்தை ஏன் செலவிடக் கூடாது? நாளெல்லாம் சிற்றுரை ஆடி...... சின்னவற்றோடு கழிக்கும் நேரத்தை இப்படிப்பயன் படுத்தினால்...... கற்பனைக் கோட்டிற்கு அப்பாலே போகிறதே பயன்! விரயமாகும் நேரத்தை அப்படியேகூடக்காப்பாற்றவேண்டாம் ...அதில் ஒரே ஒருமணி நேரத்தைக் காப்பாற்றினால்...... பயன்படுத்தினால்...எத்தனை இன்பம்!... பிறந்த பயனைப் பெறுவதற்கு எங்கோ போகிறார்களே... கொஞ்சம் உணர்ந்தால் மிக எளிதாகக் குறிக்கோளைப் பெற்றுவிடலாமே...!

எத்தனைதான் கடினமான வேலைகளில் ஈடுபாடு கொண்டிருந்தாலும்......எவ்வளவுதான் சிக்கலிலே குழப்பச்சேற்றிலே உழன்று கொண்டு இருந்தாலும் படுக்கைக்குப் போகும்போதாவது... மனச்சாந்தி பெறவும்...நல்ல மனோபாவம் வரவும்...ஒரு நல்ல நூலைப் பதினைந்து நிமிடங்கள் செம்மையாகப் படிக்க இயலாமலா போகும்? கூடிய மற்ற வேலையல்லவா? அதோடும் களைப்புக்கு ஒரு மாற்றுசு—மாமருந்தாக அமையுமே. நெஞ்சத்தில் ஒருவிறுவிறுப்பு உண்டாகுமே! உணர்விலே ஒரு அமைதி பயிலுமே! உடலுக்கு ஒரு உற்சாகம் ஊற்றெடுக்குமே! ஒரு இன்பகரமான பொழுதுபோக்காகவும் அமையுமே! இதைவிட வேறு என்ன வேண்டும்? கரும்பைச் சுவைக்கும் போது உண்டாகும் சிரமம் ஒரு சிரமமா? வாழ்க்கையிலேயே அழியாத ஒரு பயனுள்ள செல்வத்தினை கூடுதல் ஒவ்வொரு நாளும் செலவிடும் அந்தச் சுவையான பதினைந்து நிமிடங்கள்! பெரும் முயற்சிகளாலும் பெறமுடியாத கொழுத்த மனச்சாந்தியைத் தருவது அந்தப் பதினைந்து நிமிடங்கள்! இத்தனையும் இருக்கின்றன ...மனம வேண்டுமே......மார்க்கம் மலர!

ஆகையினால், நேரங்கிடையாது என்று சொல்லுவது பொய்; நேரமென்னவோ கிடைக்கிறது, படிக்க முடிகிறதுதான் இல்லையென்று சொல்லுவது மெய்! படிக்க முடியவில்லை எனபதற்குத்தளம் மனமின்மை! ஆசையின்மை! அதைக் கூடத் துணிந்து சொல்ல முடியாது. ஏனென்றால் மனிதன் ஆசைகளின் கோட்டம்! எந்த மனிதன புகழை விரும்பவில்லை? எவன் தான்மதிக்கபட வேண்டும் என்று விழையவில்லை? ஆகையினால் சோம்பேறித்தனம்தான் தளம் என்று கூறவேண்டும்! புத்தகத்தை எடுத்தாலே என்னவோ ஒரு பரம்பரைப் பகை! அத்தகைய கெழுதகை நண்பர்கள் சுவையான சிறுகதைகள், நாவல்கள் முதலானவற்றைப் படித்தால்,படிக்கும் ஆவல்வரும்...வளரும்...பிறகு பயனை அடையலாம்! பொது அறிவை நிறையப் பெறலாம்! ஒவ்வொருவரும் ஒரு அறிவுக் களஞ்சியமாக விளங்கலாம்!

உலகில் எத்தனையோ புதுமைகள் பூக்கின்றன! நாமும் புதுமைப் பித்தர்களாய்த் திரிகிறோம்! புதுமைகாண விரும்புகிறோம்! அதோடு நின்றுவிடுகிறோம்...... புதுமைகள் கிடைக்க வில்லையே என்று ஏங்குகிறோம்! அந்த ஏக்கம் அறியாமையின் அச்சாரம், இந்நிலையினை நீக்க வேண்டாமா?

வைர நெஞ்சிருந்தால் முடியாதது உளதா? உணர்வுகளை நாம் கட்டுப்படுத்த வேண்டாமா? உணர்வுகளுக்கு நாம் அடிமைப் படுவதா? அந்த அடிமை மனப் பான்மையினின்று வெளியேறிக் கிளர்ந்தெழ வேண்டாமா? அத்தகைய புதிய கிளர்ச்சிக்கு நல்லவழி படித்தல்தானே! வாழ்க்கை முழு வடிவம் பெறுகிறதா? காலம் ஓடுகிறதே! பாதி கங்குல் அரித்து, செரித்துக் கொள்கிறதே. மீதி பாதியில் உலகம்அறிய...முதுமை ...பிணி...இப்படி எவ்வளவு விரயமாகிறது! இருக்கும் நல்ல காலத்தை விழலுக்கிறைத்த நீராக்குவதா...பழக்கமில்லை என்றால் எப்போதுதான் பழக்கப்படுவது...? நம்மை நாம் ஆள்வது எப்போது? நிலையாமை உண்மையல்லவா? நாளைக்கு நாம் எப்படியோ? நம் ஒளிவிளக்குகள் நிலைத்திருக்கும் என்பது சதமா?...உள்ளத்தில் உறுதி தழைக்க வேண்டாமா?

ஒழியாத தொல்லைகளிலும் — குறையாத வேலைகளிலும் ஈடுபாடு கொண்ட அருமை நண்பர்களே... படிக்க நேரமில்லை என்கிறீர்களா? உண்மை அதுவா...? உங்களுக்கு ஒரு சிறிய எடுத்துக்காட்டு...

அமெரிக்க நாட்டின் அரும் பெரும் மருத்துவப் தலைவர் சர். வில்லியம் ஒஸ்லர் ஜான்ஸ் ஆப்கின்ஸ் மருத்துவப் பள்ளியிலும் பிறகு மேக்கில் பல்கலைக்கழகத்திலும் மருத்துவம் கற்பித்துவந்தவர். நவீன மருத்துவத்தில் மூத்தவர். புகழ்பெற்ற இன்றைய அமெரிக்க மருத்துவர்கள் எல்லாம் அவருடைய மாணவர்கள். அவரிடம் வித்தை கற்றவர்கள்; அவருடைய மருத்துவ நூல்களின் அறுவடைகள்! மனிதன் ஏன் இறந்துவிடுகிறான் என்பதற்குரிய நுட்பமான அவருடைய ஆராய்ச்சிக் குறிப்புகள் மருத்துவ உலகிற்கு மாபெரும் பேறுகள்!

மருத்துவத்தில் மட்டும் அவர் சமர்த்தரல்லர்; பொது அறிவிலும் வித்தகர்; நடமாடும் பல்கலைக் கழகம்! மனிதன் வாழ்நாளில் என்னென்ன நினைத்துக்கொண்டு போகிறான் என்பதை அறிய விரும்பினார் அவர்! அதற்குச் சிறந்த வழி ஒன்று உண்டென்றால், அதுவே மனிதன் படைத்த நூல்களைப் படித்தல் என்பதை அவர் கணித்தார். மருத்துவ ஆய்வுச்சிக்கல்களிலே மும்முரமாக ஈடுபாடு கொண்ட அவருக்கு நூல்களைப் படிக்க நேரத்தைக் காண்பது எப்படி? இது ஒரு பெரும் குழப்பமாகப் போய்விட்டது! 24-மணிகளில் உறக்கத்திற்கும்......உணவு கொள்வதற்கும் .........மற்றவற்றிற்கும் சில மணிகளை ஒதுக்கவே அவருக்குமெத்தக் கடினமாக இருந்தது. இந்நிலையில் நூல்களைப் படிக்க அவரால் எங்ஙனம் நேரத்தைக் காண முடியும்? அவருக்கு ஒன்றுமே புலப்படவில்லை. மனமோ வெதும்பிக் கொண்டிருந்தது. முடிவில் ஒரு துணிவுக்கு வந்தார். படுக்கப் போவதற்குமுன் 15-நிமிடங்களைப் படிக்கச் செலவழிக்கத் துணிந்தார். இரவு 11-மணிக்குப் படுக்கப் போகும்போது 15-நிமிடங்கள் படித்துவிட்டு 11-15 மணிக்கே படுக்கச் செல்லுவார். ஆராய்ச்சிகள் இரவு 8-மணி வரை நீடிக்குமாயின் 15-நிமிடங்கள் படித்துவிட்டு 2-15 மணிக்கே படுக்கப்போவார். அதாவது தன் உறக்க நேரத்தில் 15-நிமிடங்களைப் படிக்க எடுத்துக் கொண்டார். என்று இப்படி ஒரு உறுதியை எடுத்துக் கொண்டாரோ அன்று முதல் அந்த உறுதியை அருமையாகக் காப்பாற்றினார். எந்தக் காரணத்திற்காகவும் உறுதியை நழுவவிடமாட்டார். எது எப்படிப் போனாலும் 15-நிமிடங்கள் படிக்கச் செலவு செய்துவிடுவார். அப்படிச் செய்தாலொழிய அவருக்கு உறக்கம் பிடிக்காதாம்!

இப்படி 15-நிமிடங்களை நாள் தோறும் தவறாமல் படிக்க உபயோகப்படுத்தியது அவரை ஒரு மாபெரும் கல்விமானாக்கியது! ஆங்கில இலக்கியப்பொழிலானார்! பதினேழாம் நூற்றாண்டின் ஆங்கில உரைநடை மன்னன் சர் தாமஸ் பிரஷன்தம் உரை நடை அனுபவம் அவருக்கு எளிதாயிற்று! அவ்வுரை நடையில் வல்லவரானார்! அவ்வுரை நடையின் களஞ்சியமானார்! சர் தாமஸ் பிரவுனின்

நூல்களுக்குப் புகழ்பெற்ற நூல் நிலையமே அவருடைய நூல் நிலையம்தானும்! ஆராய்ச்சிக் கடலிலே மூழ்கி மூழ்கி நேரம் போதாமல் வருந்தி இருந்த அவரே இப்படி, படிக்க நாள்தோறும் ஒரு கால் மணி நேரத்தை ஒதுக்கிக் கொண்டாரென்றால், நாம் ஏன் பல தொல்லைகள் இருந்தாலும் தினம் ஒரு கால் மணி நேரத்தை படிக்க ஒதுக்கக்கூடாது? அவர் பெற்ற அத்தனை பயனைப் பெறக் கூடாது? நாம் உறக்க நேரத்தைக் கூடக் குறைக்க வேண்டியது இல்லை.........நேரத்தை வீணுக்கு வதைக் குறைத்தால் போதுமே... ஒரு பதினைந்து நிமிடங்களை ஒதுக்கி ஒரு விநாடிகூட விரயமாக்காமல் செவ்வனே பயன்படுத்தினால் கொழிக்கும் அறிவுச் செல்வம்தான் எத்தனை உயர்ந்தது! அந்த ஆர்வம் வர வேண்டுமே......

படிக்கும் ஆசை மேல் நாடுகளில் கொழுந்துவிட்டெரிகிறது. பிறந்ததும் அவர்களுடைய அறிவுப் பசி 'யானைத் தீ'யாகிறது! இளம்பிராயத்திலேயே படிக்கும் பழக்கம் அவர்களோடு இரண்டறக் கலந்துவிடுகின்றது. எங்கெங்கு நேரங்கிடைக்கிறதோ அங்கெல்லாம் படிக்கிறார்கள்! ஒரு விநாடியைக்கூட அவர்கள் வீணுக்க விழைவதில்லை! இந்த விஷயத்தில் மட்டும் அவர்கள் படுகஞ்சர்கள்! இல்லையென்றால் சட்டைப் பையில் எப்போதும் புத்தகம் வைப்பார்களா?...படுக்கையில் தலையணையோடு சேர்த்து நூலை வைத்திருப்பார்களா?...... குளிக்கும் அறையில் இருக்கும் மாடத்தில் புத்தகத்தை வைத்திருப்பார்களா ?..........சாப்பிடும் மேஜையின்மேல் நூல் வைத்து அழகு செய்வார்களா? இப்படி, கண்ட இடங்களில் நூல்களென்னும் அகல் விளக்குகளை வைத்து அணி செய்வார்களா?......அதை ஒரு சம்பிரதாயமாக மாற்றிக் கொள்வார்களா?

நாம்தான் சரசுவதியை நம்பிப் புத்தகங்களை எல்லாம் மாடிப்படியிலோ பரணையிலோ அடுக்கி அழகு பார்த்தாலே, படிப்புத் தானுக வந்துவிடும் என்ற சம்பிரதாயத்தை அடிப்படையாகக் கொண்டவர்களாயிற்றே! முடியுமா இப்படியெல்லாம் செய்ய...!!

★

8-ம் பக்கத் தொடர்ச்சி

பெற்ற சோழவளநாட்டு மக்கள் மானங்காப்பதில் தலைசிறந்தவர்கள் என்று! இதற்குள் ஏனிந்த மாற்றம்?''

"உண்மைதான்! உங்கள் சோழன் திண்டோள் காட்டி வெற்றிதேடும் திறல்வேந்தன் என்று மட்டும் கூறி நிறுத்தியது மிகமிகத் தவறுதான்...''

"பின்..."

"அந்தக் கெழுதகை வேந்தன் இப்போது ஆட்சி நெறியிலிருந்து தவறி நடக்கும் கொடுங்கோலனுகவும் மாறிவருகிறான். இமய நெற்றியிலே கொடிபொறித்த சோழ மரபுக்கு இழுக்குத் தேடுவோனுக அமைந்து வருகிறான், ஆளும் சோழ மன்னன்."

"மூச்சு விட்டுக்கொள், மொய் குழலே! அப்படி என்ன நாட்டுக்கும் ஏனைய நன்னெறியாளருக்கும் தெரியாத குற்றம் உனக்குத் தெரிந்துவிட்டது? கோல்வளையாக் கோனுட்சி செலுத்தும் சோழன் யாருக்கு எந்த நேரத்திலே நீதி வழங்கத் தவறிவிட்டான்? அறம் செய்யத் தவறினுனு? புறங்காட்டி ஓடினுனு? அடுத்தவர் துயருற்ற காலை துணை செய்ய எடுத்த கையைத் தடுத்து நிறுத்தினுனு? புலமையைப் போற்ற மறந்தானு? என்ன குற்றம் செய்தான், ஏந்திழையே? என்ன குற்றம் செய்தான்?''

"போதுமடி, வீரம்! ஆளும் காவிரி நாடன் அவன் முனனேருக்கு அடுக்காத செயலொன்றைச் செய்துவிட்டான்; அதனுல் தீராத களங்கம் வந்து சேர்ந்துவிட்டது. ஆமாம். அளவோடு வரிகொள்ளத் தவறிவிட்டான் உங்கள் அருமை மன்னன்!''

"வரி பெறுவதிலே தவறிழைத்தானு? புலிக்கொடி பறந்திடும் பொன்னுட்டிலே வரிச்சுமை இதுவரை வாட்டியதில்லை என்பது தானே வரலாறு! என்ன இங்கே புதிரான செய்தியை எடுத்து விரித்திருக்கிறாய்? புரியத்தான சொல்லேன்!''

'தேன் குழல்! உனக்குத் தெரியுமே! வற்றாத காவிரிபாயும் வளநாட்டு மக்கள் இதுவரை ஆறிலொரு பங்கைத்தானே வரியாகச் செலுத்தி வருகிறார்கள்? ஆனால் தீரா விருப்பக்காரன் உங்கள் வளவன் இப்போது அவ்வழக்கிலிருந்து பிறழ்ந்து வரிக்கொள்ளையிடுகிறான்; மிச்சமின்றிமீதமின்றிப் பொருள்களைக் களவாடிச் செல்கிறான்!''

"எங்கே எழில்வளை? யாரிடமிருந்து பறித்தான் அப்படி? உன் தந்தையிடத்திலா, அல்லது உன் தாய் மாமன் வீட்டிலா? விளங்கத்தான் சொல்லேன்!''

"தந்தையிடமிருந்து பறித்தாலென்ன? என்னிடமிருந்தாலென்ன? கொள்ளும் முறையிலே மன்னன் கொடுமைக்காரனுகி விட்டான்!''

"உன்னிடமா? நீ எப்பொழுது வரி செலுத்தத் தொடங்கினுய்? என் அன்புத் தோழியே! என்ன தொழில் செய்கிறாய்?''

"ஆமடி! சோனுடன் நம் வீதி வழியே உலா வந்தபோது, என் காதற்களத்திலே புகுந்ததுமட்டுமின்றி, நான் நலமுடன் பயிரிட்டு வந்தஉள்ளம்,நாணம்,அழகு ஆகிய அணிகலன்களையெல்லாம் முறை தவறிப் பறித்துச் சென்றானடி! அதனுல் நான் இங்கே பித்துப் பிடித்து வாடுகிறேன். இது அடுக்குமா? நீயே சொல்! புனல்நாடன் இழைத்த இந்தப்பொல்லாங்கினை யாரால் பொறுத்துக்கொள்ள முடியும்? ஐயோ! அறம் என்பதே இனி அழியத்தான் வேண்டுமா?''

"ஓ......ஒ......வழக்கு இப்படிப் போகிறதா? இரு, இரு இதோ ஒரு நொடியில் வந்துவிடுகிறேன்.

'கலகல'வென்று வெண்முத்துப்பல்சிந்தச்சிரித்துக்கொண்டே ஓடிய தேன்குழல் கொஞ்ச நேரத்திற்குள் எழில் வளையின அன்னையிடம் எதையோ கூறிக்கொண்டிருந்தாள்!

எழில்வளையின் அந்த வழக்குரை படலம் 'முத்தொள்ளாயிரம் 89-வது பாடலாக உருப்பெற்று இருக்கிறது.

அது இது:—

என் நெஞ்சு நாணு நலனு மிவையெல்லாம்
மன்னன் புனனுடன் வௌவினன்—என்னே
அரவகலல்குலாய்! ஆறிலொன்றன்றே
புரவலர் கொள்ளும் பொருள்.

# "எட்கார் ஆலன்போ"

—[கி. சோழன்]—

3650-நாட்கள் இரவென்றும பகலென்றும் பாராமல் உழைத்து உருவாக்கிய ஓர் பெருங் காவியத்தை இரண்டு டாலர்களுக்கு விற்றுத் தன் பசியைப் போக்கிக் கொண்டான் ஓர் மாபெரும் இலக்கிய மேதை!

யார் அந்த கவிஞன்?

அமெரிக்க இலக்கிய உலகில் தனக்கென ஓர் தனியிடம் தேடிக் கொண்ட "எட்கார் ஆலன்போ" என்ற அந்தக் கவிஞன் தன்னுடைய வாழ்நாட்களில் பட்டதுன்பம் கொஞ்சமல்ல! உலகில் தனக்குக் கிடைத்தற்கரிய மாபெரும் செல்வம் என்று எண்ணி உயிரினும் மேலாக அவன் நேசித்து வந்த அவனுடைய அருமை மனைவி வறுமையாலும், நோயாலும் மாண்ட நேரத்தில் அவளுடைய உடலைப் புதைப்பதற்குக் கூட அவனிடம் காசில்லை!

1809-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 19-ம் தேதியன்று போஸ்டன் நகரில் இவர் பிறந்தார். தனது இளமைப் பருவத்திலேயே தந்தையை இழந்து இவர் அனாதையானார்! அந்த அனாதைச் சிறுவனை, ரிச்மன்டில் வாழ்ந்துவந்த புகையிலை வியாபாரியான ஜான் ஆலன் என்பவர் தன்னோடு அழைத்துச் சென்றார்! அன்று முதல் அவர்தான் அவனுக்கு வளர்ப்புத்தந்தை! ஜான்ஆலன் அவனுக்குக் கல்வி கற்பித்தான். சிறுவன் வளர்ந்து பெரியவனானான். அவன் வளர்ச்சியோடு தீய பழக்கங்களும் வளர்ந்தன! சூதாடுவதிலும், மதுவருந்துவதிலும் அவனுடைய நாட்டம் சென்றது! அவன் வர்ஜீனியா பல்கலைக் கழகத்தில் படித்துக்கொண்டிருந்த போது ஒரு நாள் அவன் மது வருந்திவிட்டுக் கல்லூரிக்குச் சென்றான்! அவனுடைய ஒழுக்கக் கேடான செயலைக்கண்ட கல்லூரி நிர்வாகிகள் அவனைக் கல்லூரியில் இருக்கத் தகுதியற்றவன் எனக்கூறி அங்கிருந்து நீக்கிவிட்டனர்! செய்தியறிந்த அவன் வளர்ப்புத் தந்தை கடுஞ்சினம் கொண்டார். வீட்டிற்கு வந்த அவனை நையப்புடைத்து வீட்டை விட்டுத் துரத்திவிட்டார்!

அதுவரையில் தனது வளர்ப்புத் தந்தையுடன் ரிச்மன்டில் வாழ்ந்துவந்த ஆலன்போ தான் பிறந்த ஊராகிய போஸ்டனுக்கு 1827-ல் திரும்பிவந்தான். வீட்டிற்கு வந்ததும் தான் முதன் முதலில் எழுதிய "தாமர்லேன் அண்டு அதர்போயம்ஸ்" என்ற தனது கவிதையை வெளியிட்டார்! ஆனால் அது அவருடைய வறுமையைப் போக்கவில்லை. பிறகுதான் அவர் அமெரிக்க இராணுவத்திலே சேர்ந்துகொண்டார்! ஆனால் துப்பாக்கி ஏந்திப் போர்க்களத்திலே நிற்கவேண்டிய அவன் தன் அறையிலே உட்கார்ந்துகொண்டு கவிதைகளை இயற்றிக்கொண்டிருந்தான்! எனவே இராணுவ அதிகாரிகள் அவன் இலாயக்கற்றவன் எனத் தீர்மானித்து இராணுவத்திலிருந்து அவனை நீக்கிவிட்டனர்!

வேலையிலிருந்து நீக்கப்பட்ட ஆலன்போ நேராகத் தன் அத்தையின் ஊரான பால்டிமோருக்கு வந்து தங்கினான். தன் அத்தை மகளான "வர்ஜீனியா" என்பவளை அவன் காதலித்தான். திருமணமும் நடந்தது. வர்ஜீனியாவோடு அவன் வாழ்ந்த காலத்தில் ஏராளமான கவிதைகளையும், சிறுகதைகளையும் எழுதினான். என்றாலும் அவன் வாழ்வு உயரவில்லை! 1835-ம் ஆண்டு அவன் திரும்பவும் தன் மனைவியோடு ரிச்மன்டிற்குவந்தான் "மெசஞ்சர்" என்ற ஓர் இலக்கிய ஏட்டின் துணை ஆசிரியனாகச் சிறிதுகாலம் பணியாற்றினான். சில நாட்களில் அதையும் விட்டுவிட்டு "பிலடல்பியா"வில் சிறிதுகாலம் வாழ்ந்தான். பிறகு "நியூயார்க்" நகருக்குச் சென்றான் தன்மனைவியுடன்.

நியூயார்க் நகரில் ஒரு சிறு குடிசையை மாதம் பன்னிரண்டு ரூபாய் வாடகைக்கு எடுத்துக் கொண்டு அங்கே வாழ்ந்தார்கள். பலமாதங்கள் அவர்களால் வாடகை தரமுடியவில்லை—அவ்வளவு வறுமை! அந்தக் குடிசையில் தான் உலகப் புகழ்ப்பெற்ற மாபெரும் இலக்கியமாகிய "தி ரேவன்" என்ற காவியத்தை உருவாக்கினான்! ஆனால் அந்தோ! வறுமையின் கொடுமை அந்தச் சாகாத இலக்கியத்தை இரண்டே டாலர்களுக்கு விற்றுத் தங்கள் பயங்கரப் பசியைப் போக்கிக் கொண்டார்கள்.

1847-ம் ஆண்டு அவன் ஆசை மனைவி வறுமையின் கொடுமையாலும் தீராத நோயாலும் வேதனைப்பட்டுக்கொண்டிருந்தவள் வறுமையின் கொடுமையிலிருந்து மட்டுமல்ல இந்த உலகத்திலிருந்தே விடுதலை பெற்றுக் கொண்டாள்!

வசந்தகாலம் வந்தது. அவன் வீட்டு முற்றத்தில் ஏராளமாக பூத்துக்குலுங்கும் "டாண்டலியன்" என்ற அந்த மஞ்சள் பூச்செடிகள் பூக்கத்துடங்கின. எத்தனையோ முறை பசியின் கொடுமையைத் தாங்கமுடியாமல் அந்தத் தம்பதிகள் அந்த மஞ்சள் பூக்களை வேகவைத்துத்தின்று தங்கள்பசியைப் போக்கிக்கொண்டிருக்கிறார்கள்! இன்று அந்த பூக்கள் அவனுக்கு தாங்கொணா வேதனையைத் தந்தது! எங்கும்குலுங்கி நிற்கின்ற வசந்தத்தின் எழில் தோற்றம் அவனைப் படாத பாடுபடுத்தியது. அவன் தன் அன்பு மனைவியோடு வாழ்ந்த நாட்களை எண்ணிப்பார்த்தான். அவளோடு கொஞ்சிக் குலவிய நாட்கள்! அவளின் அன்புப் பார்வை அத்தனையும் அவன்முன் நர்த்தனமாடியது. அந்த நினைவிலேயே அவன் பலகவிதைகளை எழுதினான். அவைகள் அத்தனையும் இன்று இலக்கிய உலகில் அழியா இடம் பெற்றவைகளாகிவிட்டன! 1849-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 7-ந் தேதி ஆலன்போ தனது முன்னாள் காதலியொருத்தியைக்காண ரிச்மன்டிற்குப்போய்த் திரும்பி வரும் வழியில் பால்டிமோரின் வீதியொன்றில் நிலைவிழந்து விழுந்தார். அங்கேயே அவர் உயிர் போயிற்று!

சில ஆண்டுகளுக்கு முன்னால் அமெரிக்க அரசாங்கம் நியூயார்க்கில் அந்த இலக்கிய மேதை வாழ்ந்த இடத்தைவாங்கி அங்கே அவருக்கோர் நினைவு மண்டபம் எழுப்பியுள்ளார்கள்!

# பாசவலை ★ தவிர்த்து ★ மோசவலை!

"ட்டரசியல்லப்பா, அவள்! விழி ...சி!! பாகுமொழியும், பனிப் ...ர்வையும் வளைக்கவே ஒழிய, ...ன்னை வளர்க்க, அல்ல. இன் ...ும் வரக்காணேனே! — என்கிற ...டலை இசையுடன், பாடக்கேட்க ...ாய், நீ அவளிடம். ஆனால் ...ன அத்தான் வரவில்லையே ...னும்', என்கிற ஏக்கத்தை நீ ...னக்குரியவளிடம்தான் காண ...டியும். நீ வாடினால், வாடுபவள் ...ன்னுடையவள்! நீ வாழ்ந்தால் ...ன்னை நாடுபவள், அவள்! ...ன்பே—உம்மைக் காணவிடில் ...ன மனம் திக் திக்கென்று அடித் ...துக்கொள்கிறது — உம்மைப் ...பாலுண்டோ உலகில்'—என்று, ...தடுகளைத் திறந்து, உன் உதடு ...ள் திறக்கமுடியாத அளவுக்கு ...இச்இச்' என்று முத்தங்களைச் ...சொரிவாள், அவள். எல்லாம் ...தற்கு? உன் பை காலியாகி, ...ன்கைக்கு மாவும் வரவேண்டுமே ...ன்பதால்! உனக்குரியவள் இருக் ...றளே, இவள் பேசமாட்டாள்— ...ன் அன்பையும், உன்னைக் காண ...ல் தவிப்பதையும் வாய்திறந்தும் ...சொல்லமாட்டாள் — வலியக்கூட ...த்தம் தர முகம் நாணுவாள்— ...னால், இவள் இதயம மட்டும் ...ன்னிடம்மட்டும்தான இருக்கும்! ...ந்த உண்மையை நீ அறிய ...வண்டும். அப்போதுதான், ...னக்கு மொழியாளின் மோசவலை ...தரியும்; மாண்புமிக்க மனைவி ...ன் மேன்மை புரியும்."

* * *

...மையல் கொண்ட மைனர்! தவிக் ...கும் தையல்! பணம் பறிக்கும் ...வலைக்கண்ணாள்! — பையன்மீது ...அன்பு கொண்டவர், பரிதாபத் ...தோடு பேசுகிறார், இப்படி.

மைனர், அறிவுக் கண்களோடு உலகைப் பார்ப்பவனானால் உண்மையை உணருவான் — தளுக்கிக் கும் தாரத்துக்குமிடையிலேஉள்ள வேற்றுமைகளை எண்ணுவான். தொடர்பை, அக்கணமே அறுத்துக் கொள்வான. சொந்த மனை, சொந்த மக்கள், என்று ஓடோடி வந்து இன்பம் பெறுவான்.

விலைமாதின் இடத்துக்கு இன்றைய உலகில், எல்லாம்வல்ல ஏகாதிபத்யங்கள் வந்துள்ளன. ஒரு போது வாளையும குண்டுகளையும் நம்பிய வல்லரசுகள் இன்றைய தினம, வசீகரத்தையும் வாக்கு சாதுர்யத்தையும், வீசியே நாடுகளை வளைக்க முயலுகின்றன.

வெளிநாடுகளை மட்டும் நாம் குறிப்பிடவில்லை, இந்திய உபகண்டம் என்று அழைக்கப்படும் இம் மாபெரும் நிலப்பரப்பினைக் கட்டியாளத் துடிக்கும், டில்லி ஏகாதியத்தியமும், இந்தத் தளுக்கு மினுக்கு வேலையைத் திறம்படச் செய்து வருகிறது.

## அரங்கண்ணல்

கோபித்துக்கொண்டு போய்விடுவான், மைனர்! அவனுக்குக் கொஞ்சங் கொஞ்சமாக மயக்கம் தெளிய ஆரம்பித்திருக்கிறது!— என்பதை, உணரும்போது, வலை வீசி வாழ்பவள், அவனை எது குளிர்விக்கும், எது தன் வசமே இடக்கச்செய்யும் என்பவைகளையெல்லாம் சிந்தித்து, சந்தர்ப்பத்துக்குத் தகுந்த அம்புகளை ஏவி, அடைக்கலம் கொள்ளச் செய்வாள். அதேபோல, இம்மாபெரும் நிலப்பரப்பினைக் கட்டியாளும் டில்லி ஆதிக்கமும், ஒரு மாநிலம் முரண்டுகிறதென்றால், உடனே அந்த மாநிலத்தின் புகழ்—அதன் தரம்—மொழிவளம் ஆகிய பெருமைகளை யாரையாவது ஒரு பெரிய ஆளை அனுப்பி, புகழ்பாடச் செய்வதும், அந்தப் புகழெல்லாம் ஒளிவிட வேண்டுமானால், ஒற்றுமையுடன் இந்திய அரசிலிருக்க வேண்டுமெனவும், பல்லவிபாடச் செய்வது, வழக்கமாகி வருகிறது.

ஆண்டுக்குப் பலதடவை குடியரசுத் தலைவர் இராசேந்திரரும், அவரது சகாக்களும், இங்கெல்லாம் வந்து, நம் எழிலையும் திறனையும் வியந்து வியந்து உரைத்துவிட்டுச் செல்வது இதற்குத்தான்! "மச்சான் உன்னைப் பார்த்து, மயங்கிப்போனேன் நேத்து" என்று, இந்த உபகண்டத்தை கட்டியாண்ட வெள்ளையனும் பாடாமலில்லை—தாசர்களைத் தயாரிக்காமலில்லை — அவன் இருந்த அதே இடத்திலமர்ந்தபடி அரசாங்கம் நடத்துகிறவர்களல்லவா, இவர்கள்? அதே முறைகளை அணுவளவும் பிசகாமல், பல் இனத்தவரும், மொழியினரும் வாழும் இந்த நிலப்பரப்பில் காட்டி வருகிறார்கள்!!

* * *

"ஏனிப்படி, ஒரு மோசவலையில் சிக்கி உழல வேண்டும்? இதே பாகுப் பேச்சையும், பரவசத் துதியையும், நாளைக்கும் நாம் பெறமுடியாதா? தனியாக நாமிருக்கிறோம் என்றால், தேடித்தேடி ஓடி வருவார்களே! தேவையென்றால்-விலைமாதின் சங்கீதம்ரசிக்கத் தகுந்தது என்றால் அதை ரசிப்பதோடு தொடர்பை வைத்துக் கொள்வதுபோல வைத்துக் கொள்ளக்கூடாதா? அது தவறா?

கூடி நின்று கொட்டமடித்தால் தானா, ஒற்றுமை என்று பெயர்? விலகி நின்று, இன்ப துன்பங்களைப் பங்கிட்டுக்கொள்ள முடியாதா, என்ன?

* * *

காங்கிரஸ் ஆதிக்கபுரியின் தலைவர்கள் அமர்ந்திருக்கும் டில்லியினைப்பற்றி இதுபோல நாம் குறிப்பிடும்போது காங்கிரஸ்காரர்களுக்குக்கூட அவ்வளவு கோபம் வருவதில்லை; நமது கம்யூனிஸ்டுத் தோழர்களுக்கு நம்மீது கடுமையான கோபம் பிறப்பதுண்டு.

ஏனப்பா! இப்படிப் பேதம் காட்டிக் காட்டிப் பேசுகிறாய்? விலைமாதோடு ஒப்பிடுகிறாயே, நம்ம டில்லியை! அதுதானே தாரம்! பார்த்தாயா நம்ம பண்டித நேரு ஓடோடி வந்தார் கேரளத்துக்கு—உயர் கலைகளை ரசித்தார்—கவியரசர் வள்ளத்தோல் நடாத்திய நாட்டிய மண்டலிக்குக்கூட மத்திய சர்க்காரின் மான்யம் உண்டென்றார். ஏன்? தமிழ் நாட்டுக்கு இந்திய ஜனாதிபதி வரவில்லையோ! தமிழைப்பற்றியும், தமிழரின் தொன்மை குறித்தும், உருக உருகப் பேசியதை மறந்துவிட்டாயோ? ஏனப்படிப் பேசுகிறார்கள் — உன்னை வளைத்துப் போடவா? அல்ல! அல்ல!—உன்னோடு இணைந்து நின்று 'இந்தியாவெனும் இப்பாரதம் எழில்பெற வேண்டுமெனும் ஆசையால் தானே'—என்று, அழகு தமிழால் அல்ல ஆத்திரங்கலந்த சொற்களால் ஏசுவதுண்டு, கம்யூனிஸ்டுத தோழர்கள்.

மத்திய சர்க்கார் ஏமாற்றுகிறதாமய்யா, இவர்களை? வடக்கு வாழ்கிறதாம்! தெற்குத் தேய்கிறதாம்!! வஞ்சிக்கிறதாம் டில்லி! வாடுகிறார்களாம் இவர்கள்!—என்று, கேலி மிகச் செய்வதும் உண்டு காம்ரேடுகள்.

> "உணவுப் பொருள்கள் அனுப்புவதை அடியோடு நிறுத்திவிட்டார்கள் — கேரளத்துக்கு இப்போது, மத்திய அரசு, உணவுப் பொருள் அனுப்புவதே கிடையாது."

கண்டனக்குரல் எழுப்புகிறீர்கள்! வேறுயாருமல்ல; யார்நம்கூற்றைக் கொடிதென்றும் கூடாதென்றும் கேலியும் கண்டனமும் கிளப்புவார்களோ அதே கம்யூனிஸ்டுகள்!

கடந்த அக். 14-ந்தேதி சென்னையில் கூடிய அவர்களது கட்சிக் கமிட்டிக் கூட்டத்தில் இப்படி, கண்டனத் தீர்மானம் போட்டிருக்கிறார்கள்.

## கேரளத்துக்கு அடியோடு உதவுவதில்லை.

எனிப்படிச் செய்கிறது, மத்திய சர்க்கார்? கேரளத்து மக்கள் என்ன பாவம் செய்தார்கள்? வரி கட்டவில்லையா—உப்புச்சத்யாகிரகம் நடாத்தி உபத்திரவம் கொடுக்கிறார்களா — அருகிலிருக்கும் அராபிக் கடலில் கேரளத்தை வெட்டி வெட்டி வீசிக்கொண்டிருக்கிறார்களா—என்ன காரணம் என்று பார்த்தால், அதற்கும் விளக்கம் தந்திருக்கிறது, கம்யூனிஸ்டுக் கட்சியின் கமிட்டி.

"கேரளத்தை, எரிச்சலோடு பார்க்கிறார்கள்."

"வேற்றுமைப்படுத்தி நடத்துகிறார்கள்."

"இந்திய உபகண்டத்திலேயே, காங்கிரசு கட்சி இல்லாமல் நடைபெறும் ஒரு சர்க்கார் என்பதால், அதற்குத் தொல்லைதர முயலுகிறார்கள்."

கேரளத்தில் கம்யூனிஸ்டுகள் ஆட்சி நடக்கிறதென்பதால் இத்தனை தொல்லைகளையும் தருகிறதாம், டில்லி. கம்யூனிஸ்டு கட்சி சொல்கிறது.

தங்களது காங்கிரஸ்கட்சி ஆளவில்லையென்பதால், மக்களை அவதிக்கு ஆளாக்குகிறதாம், டில்லி. கம்யூனிஸ்டுத் தலைவர்கள் தருகிறார்கள் விளக்கம்.

என்னதான் உலக சகோதரத்துவம் பேசினாலும், அண்டை வீட்டுக்காரனோடு ஒத்துப்போக வேண்டும் என்று 'பஞ்சசீலம்' போதித்தாலும், தன் காரியம் என்று வரும்போது போதனைகள் மறைந்துவிடத்தான் செய்கிறது, நேருவுக்கு. கட்சியும், அதன் பெருமையும் கண்முன்னால் நிற்கிறதே ஒழிய, நீதியும் நேர்மையும் தெரிவதில்லை, கண்ணுக்கு.

பாவம்! நம்பூதிரிபாட், மந்திரிசபை அமைத்த நாள்முதல், எப்படியாவது இந்த வாய்ப்பின்மூலம் தனக்கும் தன் கட்சிக்கும் நல்ல பெயர் சம்பாதித்துக்கொள்ள வேண்டுமென்று படாதபாடுபட்டு வருகிறார்.

டில்லிக்காரர்கள் கூப்பிட்டால், உடனே பறக்கிறார்—ஆலோசனைகளைக் கேட்கிறார்—அதன்படி நடக்கவும் முயற்சிக்கிறார்.

காங்கிரஸ் கட்சிக்காரர்கள், அவரைக் கோர்ட்டில் கொண்டுபோய் நிறுத்துகிறார்கள்—அறிக்கைவிட்டார், அது தவறு; கோர்ட்டை அவமதித்ததாகும் என்று குற்றம் சுமத்துகிறார்கள். தவறு என்றால் வருந்துகிறேன், மன்னியுங்கள்!—என்று மனங்கனிந்து கேட்கிறார். மார்தட்டிப் பேசுகிறவர், நம்பூதிரிபாட்! எனினும் சிரம் வணங்கி, வருத்தம் தெரிவிக்கிறார்!!

எப்படியும் நல்ல பெயர் எடுக்க வேண்டும்—காங்கிரஸ் கட்சியின் ஆட்சியைவிட கம்யூனிஸ்டு ஆட்சி தரம் வாய்ந்தது என்பதை நிரூபிக்கவேண்டும் — என்று படாதபாடுபடுகிறார். முதலாளிகள் கூக்குரல்! மதவாதிகள், ஆத்திரம்! தூண்டிவிடுவோர் தூபம்! தொல்லைகள்! துப்பாக்கியை முடுக்கிவிட வேண்டியதில்லை!—இப்படி, ஏராளமான இடுக்கித் தாக்குதல்களுக்கிடையே மாட்டிக்கொண்டு, மல்லுக்கு நிற்கிறார்.

**எனினும், டில்லி, இரங்கவில்லை!**

**அவர் கட்சியைப் பாராட்ட வேண்டாம்; மக்களுக்குத் தேவையான உணவை அனுப்பலாமன்றோ? செய்யவில்லை!!**

*

மைனர், வர மறுக்கிறான்! மையல் தெளிந்து, தன்மனைவியையும் குழந்தை குட்டிகளையும் கவனிக்க ஆரம்பித்துவிட்டான்! கழனிகளையும் சொத்தையும் கவனிக்கத் துவங்கிவிட்டான்!—எனும்போது, சராசரித் தளுக்கிகள், முதலில் தூதனுப்புவார்கள். செ, செ! தூ, தூ!! போ! போ!!—என்று, அவன், திரும்பியும் பாராமல் தன் காரியத்தைக் கவனிக்க ஆரம்பித்துவிட்டால், வழக்குப்

---

**தி. மு. க. செயலாளர்களுக்கு**

### வேண்டுகோள்

1959-ம் ஆண்டிலும் வழக்கம் போல் "போர்வாள்" வெளியீடான திராவிடர் நாட்குறிப்பு வெளியிடப் படுகிறது. எல்லா ஊர்களிலுமுள்ள தி. மு. கழக செயலாளர் துணைச் செயலாளர் பெயர்களை எழுதி 15—11—58க்குள் கிடைக்கும்படி அனுப்பிவைக்குமாறு செயளாலர்களை வேண்டுகிறோம். அதன்பின் கிடைப்பவை டயரியில் இடம்பெற முடியாது.

மேலாளர், போர்வாள்,
147, பவழக்காரத் தெரு,
சென்னை-1

---

போடுவார்கள்— வம்படிக்குப் போவார்கள் — அடிமாட்களைத் தேடிப் பிடித்து ஆட்டையும் மாட்டையும் ஓட்டிவரவும் செய்வதுண்டன்றோ, தைரியமும் சண்டியர் களைச்சதா அருகிலும்வைத்திருப்பவர்கள். இப்போது, தன் சொல்லுக்குக் கட்டுப்படாது, தன் காரியங்களைக் கவனிக்கத் துவங்கிவிட்ட, நம்பூதிரிபாட்டின் மீது, இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்பித்திருக்கிறது, டில்லி.

"டேய்! எழுது கோலும் பேப்பரும் இருக்கிற காரணத்தால், இப்படி, எமது டில்லிமீது குற்றம் சாட்டுகிறாய்— குடிகேடனே!", என்று நம்மீது கோபங் கொள்ளக் கூடும், காங்கிரஸ் நண்பர்கள், கேரளத்தில் நடக்கும் ஆட்சியை, டில்லி ஏனிப்படி நடத்துகிறது, என்னவெல்லாம் செய்கிறது என்பதை, அவர்களுக்கே வேண்டியவரான ஒருவர், இதோ எடுத்துச் சொல்கிறார்,-

மத்திய சர்க்காரிலிருக்கும் கட்சியில் இல்லாத இன்னொரு கட்சி, ஒரு மாநிலத்தை ஆளுகிறது.

எனவே மத்தியஅரசு இடும்கட்டளைகளை அப்படியே ஏற்கத்தயாரில் இல்லை! அது மட்டுமின்றி, மத்திய சர்க்கார் கொடுத்ததை வாய் பேசாமல் வாங்கிக் கொள்ளாமல், தன் மாகாணத்துக்கு இது வேண்டும் அது வேண்டும் என்று கேட்டும் வருகிறது!!

இது, மத்திய சர்க்காருக்கு எரிச்சலைத் தருகிறது.

தன் சொற்படி, கேரளம் கேட்கவில்லை என்றதும்; மாகாண நலனைப் பெரிதாக எண்ணி வற்புறுத்துகிறது என்றதும், 'கட்சி கோதா'விலிறங்கி, காரியத்தைச் சாதித்துக் கொள்ள முயலுகிறார்கள்.

எனவே, ஐதராபாத்தில் கூடிய போதும் சரி, அகில இந்தியக்காங்கிரஸ் காரியக் கமிட்டியிலும் சரி, கேரள ஆட்சியைக் கண்டித்துத் தீர்மானம் போடுகிறார்கள்,— அதற்கு முன்பே, அராஜகமும் அட்டகாசமும் கேரளத்தில் நிலவுவதாகப் பறைசாற்றிவிட்டார், பண்டித நேரு — பாராளுமன்றத்திலும் கேரளத்தைப்பற்றி விவாதிக்கப் போகிறார்கள் — தங்கள் கைவசம் என்னென்ன 'சக்தி'கள் உள்ளனவோ, அவ்வளவையும் இந்த ஒரு சர்க்காரை அகற்றப் பயன்படுத்தப் போகிறார்கள், காங்கிரஸ் ஆதிக்கபுரியினர்.

இது, ஏன்?-விளக்கம் தருகிறார், மேலே குறிப்பிட்டவர். என்ன காரணமாம் தெரியுமா!!

**"கேரளத்தில் முளைவிட்டிருக்கும் சுதந்திர உணர்ச்சியும், இன்னொருவர் யோசனையில்லாமல் தங்களைத் தாங்களே நன்றாக ஆண்டு கொள்ள முடியும் என்று ஏற்பட்டிருக்கிற நிலைமையும் மத்திய சர்க்காருக்குப் பிடிக்கவில்லை!!**

ஏன் பிடிக்கவில்லை — தொலைவிட்டது, என்றுதானே இருக்க வேண்டும் — இருக்குமா, டில்லி? அதுதான், ஏக இந்தியாவையும் ஒரே கட்டுப்பாட்டில் மட்டுமல்ல, ஒரே கட்சி ஆட்சியிலும் வைக்க வேண்டுமென விரும்புகிறதே! அந்த விவரத்தையும், மேலே குறிப்பிட்டவரே கூறுகிறார் — அவர் யார் என்பதை அறிந்தால் ஆச்சரியம் இன்னும் அதிகமாகும் இந்திய உபகண்டத்தின் சமஸ்தானங்களையெல்லாம் டில்லிக்குக் கட்டுப்படுத்தி வைக்கக்காரணமாயிருந்தவரும், இரும்பு மனிதர் என்று போற்றப்பட்ட சர்தார் பட்டேலின் இலாகாவை ஆட்டிப் படைத்தவருமான, வி. பி. மேனன் தான், இவ்வாறு இந்தக் கிழமை 26ந் தேதி பெங்களூரில் பேசியிருக்கிறார்.

* * *

"ஒரே இடத்தில் அதிகாரங்கள் எல்லாம் குவிந்துவிட்டன. மாகாணங்களை ஆள்வதும், மத்திய சர்க்காரை ஆள்வதும் ஒரே ஒரு கட்சிதான் என்பதால், மத்திய பீடத்துக்கு ஏராளமான வலிவு வந்துவிட்டது."

"அரசியலமைப்புப்படி மாகாணங்களுக்கென வரையறுக்கப் பட்டிருக்கிற அதிகாரங்களைக்கூட, தன்னுடைய கட்சி என்பதால், செல்லாக் காசாக்கித் தன் விருப்பப்படி ஆக்கிக் கொள்கிறது, மத்திய அரசு."

"எது வேண்டுமானாலும், தங்கள் எஜமானனைக் கேட்கவேண்டியிருப்பதால், மாகாணங்கள் தங்கள் மதிப்பையும்மரியாதையையும் இழந்து நிர்வாகத் திறமையையும் சக்தியையும்கூட விரயமாக்கி வருகின்றன."

"இதன் மூலம், மாகாணங்களை ஆட்டிப்படைக்கும் வலுவான சக்தியாக, உருவாகி வருகிறது மத்யபீடம்."

* * *

கட்சி ஒன்று! கட்சிக் கட்டுப்பாடு!!—என்பவைகளைக் காரணமாக வைத்து, அகில இந்தியாவையும் ஆட்டிப்படைக்கும் வலுவான பீடமாக வளர்ந்து வருகிறது டில்லி, என்கிறார் மேனன்.

எங்காவது தமது கட்சியைத் தவிர்த்து ஒரு கட்சி வந்தால், அதனைச் சாய்க்கத் தம்வசமுள்ள அதிகாரம்—ஆள்பலம் — அனைத்தையும், செலவழிக்கும் டில்லி என்பதை இதோ கேரளத்தில் பார்க்கிறோம்.

உணவுப் பொருளைக்கூட அனுப்ப மறுக்கிறது, மத்திய சர்க்கார் — என்கிறார்கள் கம்யூனிஸ்டுகள்.

இந்தியா முழுவதையும் ஒன்றாக வைத்துத் தமது காங்கிரஸ் கட்சியை 'ஏஜண்டாக' வைத்து ஆளவேண்டும் என்பதுதான் டில்லியின் ஆர்வமாகும்.

எங்காவது தன்னினம், தன் மொழி, தனது சர்க்கார் என்கிற உணர்ச்சி தலைதூக்குமானால் சாகசம் வீசப்படுகிறது—சரசத் தூது நடத்தப்படுகிறது. அதையும் மீறி மாற்றுக்கட்சி பலமுள்ளதாகிவிடின், அதைச் சாய்க்க டில்லிச் செங்கோலை வீசுகிறார்கள்.

இந்திய உபகண்டத்தைத் தம் வசத்தில் வைத்திருக்க, உலக நாடுகளிலுள்ள ஏனைய ஏகாதிபத்தியங்களைவிடச் சரியானதும், பலமுள்ளதுமான ஆயுதத்தை வைத்திருக்கிறது, டில்லி ஆதிக்கம். அந்த ஆயுதம்தான், இந்திய ஒற்றுமை எனும் சொல்! அதை ஏந்தும் எடுபிடிதான் காங்கிரஸ் கட்சி!!

இந்த உண்மையை இப்போதாவது, 'காம்ரேடுகள்' உணர வேண்டும். வட்டாரத்துக்கான முழு சுதந்திரமும் பெற்றுத்தரப் பாடுபடவேண்டும்.

கேரளம், இதைத்தான் காட்டுகிறது.

---

## பிறப்பு

மதுராந்தகம் வட்டம் கொளத்தூர் கோதண்டம் துணைவியார் தோழியர் பிரபாவதி 27—10—58 திங்களன்று ஒரு ஆண் மகனுக்குத் தாயானார்கள்.

Best copy available.

# ★ கண்ணீர் பேசுகிறது! ★

கொழும்புத் தோழர்
**பூங்கா. மான்**
தீட்டியது.

"நாடா இது காடா?" என்ற கேள்வி பிறந்து "ஆட்சி நடக்கிறதா?" என்ற அவல ஒலி கிளம்பிக் கூக்குரலும் சாக்குரலும் பேய்க் குரலும், பல்கிப் பெருகி இன்று எல்லாம் ஓரளவு ஓய்ந்து அமைதிநிலவுகிறது இலங்கையில். இந்த அமைதி தொடர்கதையாக இருக்கவேண்டும்; அதுவே எல்லோரது அவாவுமாகும்.

என்றாலும் சென்றுபோன நிகழ்ச்சிகள்! கண்கண்ட வேதனைகள்! அம்மவோ! எண்ணினாலே இதயம் வலிக்கிறது! உள்ளம் குமுறுகிறது!

* * *

எட்டுத் திக்கிலும் கொடிகட்டிப் பறந்தானும்! ஆனால் வெட்டிப் போட்ட பிறகும் கேட்க நாதியற்ற தமிழனைத்தான் நாம் கண்டோம்! கொழுந்துவிட்டெரியும் தீ நாக்குகள் தமிழன் குடிசைகளை மட்டுமே சுற்றி வளைத்தன! கடைகள் சூறையாடப்பட்டன! வெறித்தனம் தலைவிரித்தாடியது! வேதனையின் எல்லையிலே நின்று தடுமாறினான்! தத்தளித்தான்! தமிழன் செத்தொழிந்தான்! பகலிலே கொள்ளை! தீவட்டிக் கொள்ளை! மாடுகள் மேய்ந்தன! வேலிகளும் கூடவே மேய்ந்தன! அலறித் துடித்த தமிழர்களின் அவல ஒலி நாடெங்கும். தெருவிலே! நடு வீதியிலே! நகர மத்தியிலே! பலர் பார்த்திருக்கத் தமிழர்கள் கொல்லப்பட்டார்கள். படையெடுத்து வருவது போல் கொலைக்கருவிகளேந்திய கொடியவர் கூட்டம் நகரெங்கும் வலம் வந்தது.

தலையில் கல்வைத்தான், மலையில் கொடி வைத்தான், கொடியில் வில் வைத்தான் தமிழன்! இன்றவன் தமிழன் என்ற சொல்லை வைத்த காரணத்தால் அவன் தலையை மண்ணில் வைத்தான் ஈழத் திருநாட்டான். வெங்கொடுமைச் சாக்காட்டில் வீழ்ந்திட்ட தமிழன் இரத்தம் காவிரிபோல் தெருவெங்கும் ஓடியது.

கிடைத்திட்ட சேதியெல்லாம் நம் நெஞ்சைத் துளைத்திட்ட தீ! செந்தீ! குந்தியிருந்த கிழவியொருத்தி கொள்ளையர்கள் இட்ட தீயால் குடில் எரியும் போது கூடவே எரிந்தாள்!

*

தொட்டிலிலே தூங்கிக்கொண்டிருந்த தங்கக் கட்டியைத் தீயவர்கள் சிலர் சேர்ந்து தூக்கியெறிந்ததைக் கண்டு ஓடிவந்த தாயொருத்தி நிலைப் படியில் தலை இடித்த காரணத்தால் விழுந்தாள்; செத்தாள்!

பற்றியெரியும் வீட்டுக்குள்ளிருந்த பெற்றவளைப்பார்க்கப்பள்ளியிலிருந்து ஓடிவந்த சிறுவன் பாதையிலே புறமுதுகில் குத்தப்பட்டான்; விழுந்து துவண்டான்; மாண்டான்.

புல்மலையிலே பதுங்கி மறைந்திருந்த தோட்டத்து முதியவர் தன் பேத்தியைப் பாதுகாக்க ஓடிவந்தார்; ஓங்கிய பெருந்தடி அவர் கழுத்திலே ஓய்ந்தது!! ஓடிவந்தவர் சாய்ந்தார் மாய்ந்தார்.

பதுளைமாநகரிலே பாங்கில் பணம் போடச்சென்ற ஒரு சிறுவன் இருபது வயதுகூட நிரம்பாத இளங்குருத்து, அடிவயிற்றிலேயிருந்து நழுவிக்கொண்டிருந்த குடலைக் கையால் தாங்கிப் பிடித்துக்கொண்டே ஓடிவந்தான்! தெருவெங்கும் சாரையைப்போல் விரியன்போல் குடல்மாலை இழுபட்டது! அந்தக்கொழுந்து விழுந்தான்; செத்தான்!

பள்ளி சென்ற தங்கை பாதையிலே மறிக்கப்பட்டாள் என்ற சேதி கேட்டு வீட்டில் மறைந்திருந்த அண்ணன் வெளியே ஓடிவந்தான்! அதற்குள்ளே வீடு பற்றி எரிந்தது! பற்றி எரியும் வீட்டுக்குள்ளே பெற்றெடுத்த தாய்! வெளியே உடன்பிறந்தவளை அள்ளவரும் 'பேய்!' என்ன செய்வான்? யாரைக் காப்பாற்றுவான் .........!

*

ஐயகோ! கொடுமை இம்மட்டோ! எண்ணவும் எழுதவும் முடியாத கோரங்கள் எத்தனை எத்தனையோ! இத்தனைக்கும் காரணம் இலங்கையின் ஆட்சிப்பீடமேறியவர்கள்தான். புதுமலர்ச்சி பெற்ற பூங்காவில் மதயானை புகுந்ததுபோல் நாடு காடாகிவிட்ட நிலைக்கு முழுக்காரணமும் அவர்கள்தான். ஈழத்திருநாட்டில் தமிழ்முரசு ஒலிக்கவே கூடாது என்ற எண்ணத்தோடு ஆணவத்தின் கொடுமுடியில் நின்று கூத்தாடியது அரசு. நாடோடிமன்னர்கள் அவர்களின் தோளிலே தொத்திக்கொண்டார்கள். நாடு காடாகியது. இன்னும் கூட கொடுமையின் முழு உருவும் நமக்குப் புலப்படவில்லை. சட்டத்தின் துணைகொண்டு ஊரையே ஊமையன் கோட்டையாக்கிவைத்துள்ளார்கள் ஊராள்வோர். எனவேதான் என்னென்ன கொடுமைகளோ எங்கெங்கு நாசமோ என்று எண்ணித் தவிக்கிறோம் நாம்.

ஆயிரத்து முன்னூற்று அறுபத்தொருவீடுகள் நாசமடைந்தனவாம்! அதிலே ஒண்ணுமில்லாமல் மண்ணாகி அடியோடு நாசமாகிவிட்டவைகள் ஏழுநூற்று எண்பத்திரண்டு. தொழிலைவிட்டுக் கைப்பொருளை இழந்து தெருவிலே நின்று திண்டாடுகிறவர்கள் இருநூற்று இருபத்தாறுபேர். குட்டிச்சுவர்களாகிக் காட்சியளிக்கும் நகரை அழகுபடுத்திய வர்த்தக நிலையங்கள் தொளாயிரத்து ஏழாம்! கொள்ளையிடப்பட்டுத் தீயிடப்பட்டுச் சேதமுற்று நாசமுற்ற பொருட்களின் மொத்த மதிப்பு ஏறத்தாழ எழுபத்துஐந்து இலட்சமாம்! இன்னும் எவ்வளவோ நாமறியோம். கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதைப் புள்ளிவிவரமாக்கிப் பாராளுமன்றத்தில் வெளியிட்டுள்ளார் பிரதமர்.

இவ்வளவுதானா என்று கேட்கத் துணியவில்லை நாம். எவ்வளவாயினும் சரியே, இருள் விலகினால் போதும். அமைதி நிலைக்கட்டும். நல்லெண்ணமும் நல்லுறவும் வளர ஆட்சியாளர் முன்வந்து செயலாற்றினால் போதும்.

★

காஞ்சீபுரம், 93, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில்